உ

ஓம் தத் சத்

பரப்ரஹ்மணே நம:

வடார்க்காடு ஜில்லா வேலூர் தாலுக்கா

வல்லம் சித்த வைத்திய சரபம்

உயர் திருவாளர்,

மந்திரமூர்த்திப் பிள்ளையவர்கள்,

# நினைவு மலர்

இது

சில அன்பர்களால் வெளியிடப்பட்டது.

2-3-40.

வேலூர் விக்டோரியா பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

# உயர்திரு மந்திரமூர்த்திப் பிள்ளையவர்கள் வரலாறு.

## 1876—1940.

உயர்திரு வித்வான்,

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,

தமிழாசிரியர் போளூர்.

நம் வாழ்விற்கினிய வடார்க்காடு ஜில்லாவில், விழுப்புரத்தி லிருந்து காட்பாடிக்குச் செல்லும் இருப்புப்பாதையில் கண்ணமங் கலம் என்னும் புகைவண்டி நிலையமொன்றுளது. இவ்வூர் நீர்வளத் தாலும், நிலவளத்தாலும் மிகச்சிறந்தது தமிழ்ப்புலவர்களாலும் மிகச்சிறந்தது. தமிழ்ப்புலவர்களும் செல்வர்களும் இன்றும் சிறப்புற வாழும் சீர்மையுடையது.

இவ்வூர், 13, 14, ஆம் நூற்றாண்டில் "இராஜகம்பீர விராஜ் யம்" என்றும், "தொண்டை மண்டலத்துப்படை வீட்டிராஜ்யம்" என்றும் சீரியபெயருடன் நிறுவப்பெற்றிருந்த சம்புவராய மன்னர் களின் ஆட்சியில் விளங்கிய பெருநகரங்களுள் தலையாயது இம் மன்னர்கள் கி, பி. 1258 ஆம்ஆண்டு வரையில் சோழ மன்னர்கட் குக்கீழே திறைசெலுத்திவந்த சிற்றரசராயிருந்தனர்.

1258ல், அரசுபுரிய வந்த இராஜ கம்பீரச் சம்புவராயன் காலத்தே இவ்வூர்மிக்கசெல்வங் கொழித்த திருநகரமாக விளங்கிற்று இதனை இராஜகம்பீரச்சதுர்வேதிமங்கலம் என்றும், கல்வெட்டுக் கள் கூறும் இம்மன்னன்தான் படைவீட்டில் இருக்கும் அம்மையப் பேச்சுரம் என்ற திருக்கோயிலைக் கட்டியவன்.

இவன் காலத்தும் இவனுக்குப்பின்னர் வந்தவருள் 1339 முதல் 1366 வரையில், சகலலோக சக்கரவர்த்தி இராஜ நாராயணச் சம்புவராயன் என்பவன் பெயர் சிறந்தவன். இவன் காலத்தே விஜயநகர வேந்தருள் ஒருவீரனான குமாரகம்பண்ணன் படையோடு வந்து சம்புவராயனை 1365ல் வென்று படைவீட்டி ராஜ்யத்தைத் தனதாக்கிக் கொண்டான். இச்சம்புவராய வேந்தர்களைப் பற்றிச் சுருங்கக்கூறின், சிவத்தொண்டுஞ் செங்கோன் முறையும் இரட்டை யர் முதலிய புலவர்கள் பாடும் புகழும் உடையர், என்பதே போது மானது.

இனிவிஜயநகர வேந்தராட்சியில் நலம் பெற்று வருகையில், கண்ணமங்கலத்தருகிலுள்ள வல்லத்தில் பணியாளர் மரபில் ஒருவர் இருந்தார். அவர் மந்திரமும் தந்திரமும்சித்தவைத்தியமும் வல்லவராய் அரசகுடும்பத்தார்க்குநேர்ந்த இடுக்கண் ஒன்றைத், தம்மந்திரவன்மையால்நீக்கி "மந்திரமூர்த்தி" என்ற பட்டம் பெற்று அவ்வரசகுடும்பத்திற்குப் பெருந்துணைவராய் இருந்தார். அவர் வழித்தோன்றல்களுள், இற்றைக்கு முப்பத்திரண்டு யாண்டுகட்குமுன், பனையபிள்ளையார் என்பார் ஒருவர் இருந்தார். இவரும்தம் குடும்பத்தில், வழிவழியாக வரும் மந்திரப் பெருமையும், மருத்துவப்புலமையும் பெற்றுச்சிறந்து விளங்கினார். இவருக்குத் தேவியுபாசனையும் உண்டு. இதனால் இவர் எண்வகைச்சித்தி நெறியிலும் கைவந்திருந்தார். ஆசுகவிபாடும் அருமையும், ஆண்மைக்கு இயைந்த உடல் வன்மையும் உடைய இவர் ஐந்துகுறைய ஒறுநாறுயாண்டு, இவ்வுலகில் வாழ்ந்து மக்கட்குப் பயன் விளைத்தவராவார். இவர்க்கு மனைவியர் இருவர். அவருள் முதல் மனைவிக்கு ஐந்து பெண் மக்களும், இரண்டாம் மனைவிக்கு அறுவர் ஆண்மக்களும், ஒருபெண்மகளும் இருந்தனர். இவ்வறுவருள் முதல்வரே, இவ்வரலாற்றுக்குரிய மந்திரமூர்த்திப் பிள்ளையாவர். இவர் கலியுகாதி ௪௯௭௭ தாது௵ ஆனி௴ ௰௪௳ திங்கட்கிழமை (26–6–1876) இரவு 8-மணிக்குப் பிறந்தவர். இளமையிலேயே இவர் நுண்மாண் நுழைபுலம் வாய்க்கப் பெற்று இருத்தலை நுனித்துணர்ந்த பனையபிள்ளை, இவர்குத்தம் குலமுதல்வர் பெற்ற சிறப்புப் பெயராகிய. "மந்திரமூர்த்தி" என்பதனை இயற்பெயராக வைத்து இன்றுயாம் பாராட்டும் பேறுமிகவுடையவராக்கினார்.

இக்குடும்பத்துள் இது போது பன்னிரண்டாவது தலைமுறை நிலவுகின்றது. தலைமுறை தோறும் குடும்ப முதல் மக்கள் மருத்துவப் புலமையும், தமிழ்ப்புலமையும் மந்திர வன்மையும் பெற்றுவந்து கொண்டிருக்கின்றனர் 'குலவிச்சை கல்லாமற் பாகம் படும்' என்பது பழுதுறுவாறு இன்றும் இக்குடும்பம், மருத்துவச்சிறப்பும் மாண்தமிழ்ச் சிறப்பும் உலகறியப் பெற்றுச், சிறந்து நிலவுகின்றது.

பனையப்பிள்ளை இவரைச் சிறுவயதிலேயே பொருந்திய கல்வியும், திருந்திய ஒழுக்கமும் பெறுமாறு பயில்வித்துப் பன்னிரண்டாவது வயதிலேயே தாம் மேற்கொண்டிருந்த சித்த மருத்துவச் செவ்விய துறையில் முறையாகப் பயிற்சி யளிக்கத்தொடங்கினார். இப்பயிற்சி எட்டாண்டுகள் வரை நடந்தது. அப்போது நாடிப் பரீட்சையில் இவர் நாடு புகழும் பீடு பெறுவாராயினர். இவர் இத்துறையில் ஒப்பற்ற பெருமை யடைந்ததற்கு அடிப்படையாயிருந்தது. இவரது தந்தையின் நீண்ட கால துய்ப்பறிவேயாகும் சுருங்கச் சொன்னால், நமது மந்திரமூர்த்தியார் இருபதாம் வயதிலேயே வைத்

தியத்துறையில் மாட்சி பெற்று விளங்கத் தொடங்கினர். நாள் செல்லச் செல்ல இவரது அயரா முயற்சியும் அறிவுடைய தக்கோரது கூட்டுறவும் இவர் பெற்ற பெருமைக்கு ஆக்கம் தந்தன. "தந்தையர் ஒப்பர் மக்கள்" எனத் தண்டமிழ்த்தொல்காப்பியனர் அறிவுறுத் தியதற்கேற்ப, இவரும் இருமனைவியருடையரானர்: முதல் மனைவி யார்க்கு ஆணும் பெண்ணுமாக மக்கள் இருவர் உள்ளனர், இரண் டாம் மனைவியர்க்கு, ஆண்மக்கள் நால்வரும், பெண்மக்கள் நால் வரும் உள்ளனர். இவருக்குப் பின்பிறந்த தம்பியரைவருள் இருவர் இறந்தனர்; மூவர் உள்ளனர். தமக்கையர் ஒருவரும் இருக்கின்றனர்.

இவருடைய மூத்த தம்பியின் பெயர் வைத்தியலிங்கம் பிள்ளை என்பது. அவர் இளமையிலேயே கூறிய மதி நுட்பம் உடை யவராயிருப்பது கண்டு, அக்காலத்துச் சென்னையில் பெரும் புலவ ரராய் விளங்கிய உயர்திரு, கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் பால் தமிழ்ப் பயில் வித்தார். அறிவு நலங்கண்டு, அதனையுடையவரை அன்னையும் அத்தனும் போல ஆதரிக்கும் அன்பு மிகுதி இவர் பால் இயல்பாகவே வீற்றிருந்த தென்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டா. வித்வான் திரு வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் "கேட் டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப" மொழியும் சொல்வளம் உடையவர்.

திரு, மந்திரமூர்த்திப் பிள்ளையவர்கள். "நோய்நாடி நோய் முதனடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்ற திருவள்ளுவர் மருத்துவ முறையை அடியொற்றி நடந்த அமைதி யுடையவர். இன்முகமும், இன்மொழியும் எளிமை வாழ்வும் இயல் பாகவே உடையவர். தமிழறிவும்-தமிழ்ப்பற்றும். தமிழறிந்தவரிடத் துத் தனியன்பும் கொண்டொழுகிய இவர், பேரருட்கடலாய் விளங் கிய சம்பத்கிரி பிரமபீடம் திரு அச்சுதாநந்த சுவாமிகளிடம் அறி வுரைவாய்ப்பு பெற்று அகத்துறவும் சமாதிப்பயிற்சியும், சாந்தி பெற்ற மனமும் உடையராய் ஒழுகினர் ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியாரவர்களைத் தமக்கு வாய்த்த சற்குருவாகப் போற்றிப் பரவிவந்தவர். இவரது ஞான முதிர்ச்சியின்திறம் இவர் தாம் நெடு நாளாக உழைத்து ஈட்டிய பொருளைத்தமது ஞான குருவின் நிட்டை கூடிய சமாதிக்கு ஆலயம் புனைந்து நித்திய நைவேத்திய வழிபாடு களுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்வதிலேயே செலவு செய்த தனல் இனிது விளங்கும் இவரது சாது சங்க பக்தியும் அவர்கட்கு வேண் டும் தொண்டாற்றும் சால்பும் எடுத்து வரையப்புகின் பெருகும்.

இன்னபல நன்னலம் கெழுமிய இப்பெரியார் தமது 64-ஆம் வயதில் அஃதாவது நிகழும் பிரமாதி ஆண்டு மாசித்திங்கள்

முதல் நாள் செவ்வாய்க்கிழமை (13–2–40) இரவு 12-40-மணிக்கு வளர்பிறை ஐந்தாம்நாளும் அசுவினியும் கூடியவான் பொழுதில் செம்மை நிலவும் உள்ளத்துச் சிவோகம் பாவனை தெளிவுசெய்வி தேக கைவல்ய மேன்மை பெற்ருர்.

தென்தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்தியு தேவூர்
அன்பன் சேவடி அடைந்தனம் அல்லலொன்றிலமே.

ஞானசம்பந்தர்.

சம்பத்கிரி பிரமபீடம்.

## திரு அச்சுதானந்த சுவாமிகளின் மாணவர் களர் உயர் திருவாளர் **கங்காராம் சுவாமிகள்.**

வல்லம் திரு. மந்திரமூர்த்தி பிள்ளையவர்கள் எமது சற்குரு மூர்த்திகளாகிய மகான், அச்சுதாநந்த சுவாமிகளிடத்துப் பெறுதற்கரிய பெரும் பிரசாதம் பெற்றவர். எமது ஆருயிர்த்தோழர், சாதனையாதி அனுஷ்டான மிக்கவர்: அளவிறந்த ஆசிரியபக்தியுடையவர். இவரது அளவா அன்பின் திறமுணர்ந்தே அடிகளும் வல்ல நகரின்கண் திருக்கோயில் கொண்டார்கள். அவரது சத்திய சங்கற்பத்தின் உண்மைப்பாட்டை பிள்ளையவர்கள் தமது பெருந்தொண்டின் மூலம் உலகிற்கு நன்கு விளக்கிவிட்டார்கள். உயிர்ப் பிணிகடிந்த ஒப்பற்ற தோழரவர்கள் மக்களது உடற்பிணிகளை யெல்லாம் கடிந்து உயிர்ப்பிணியையும் கடிதற்குரியவராக்கிவந்துள்ளார்கள். இத்தகைய பெருந்தகையொருவரை யிழக்கப்பெற்றது தமிழகத்திற்கே ஈடுசெய்யமுடியாத பெரிய நஷ்டமென்பதை அறிவுலகம் செவ்வேயுணர்ந்துகொள்ளும். கழி பேரின்னலுமெய்தும். ஆயினும் அவர் அச்சுதமூர்த்தியோடு ஏகமாதலாய உண்மைக் கைவல்யமடைந்துய்தியுற்றனர். ஆகவே இவ் உண்மைத் தன்மையை எவ்வெவர்க்கும் எடுத்துக்கூறி ஆறுதலடைவேம் ஆயினம்.

---

## இராணிப்பேட்டை அச்சுதாநந்தாசிரமம் உயர்திரு **வரதராஜ சுவாமிகள்.**

வல்லம் சித்தவைத்திய சரபம் **திரு. மந்திரமூர்த்தி பிள்ளையவர்களின்** பிரிவுக்கு நிரம்பவும் வருந்துகின்றோம். அவர் ஏனைய சித்தவைத்தியர்களுக் கெட்டாத அரிய பெரிய விஷயங்களை யெல்லாம் ஆராய்ந்துணர்ந்தவர். ஆகவே அவரைச் சித்தவைத்திய சரபமென்பது மிகையாகாது. ஏழையென்றும் பணக்காரரென்றும் வேற்றுமை கருதாது சமநோக்குடன் எவர்க்கும் எத்தகைய நோயெனினும் தீர்க்கும் தன்மையுடையவர். அடியார்களிடத்து அவர்களுக்குள்ள அன்போ மிகப்பெரியது இனி தன்னிலையுணர்ந்த தத்துவ ஞானிகளைக்கண்டவிடத்து அவரடையும் பூரிப்பிற் குவமை கூறுவதாயின் சரற்காலத்து முழுமதியைக்கண்ட சாகரத்தைத்தான் கூறமுடியும். அவர் எம்பால் தனிப்படக்கொண்டிருந்த பேரன்பிற்கு நாம் அவர்களை என்றும் மறவாதிருத்தலே கடமையாகும். அடியார் பக்தியொன்றுமாத்திரமோ சற்குரு பக்தி வேதாந்த விசாரம் அனுஷ்டானநிலை ஆகிய இவைகளெல்லாம் அவரிடத்துத் தலைசிறந்துவிளங்கின. அவருடைய பிரிவுபற்றி அவருடைய சகோதரர்களுக்கு எமது அனுதாபத்தை மிக்க ஆறுமையோடும் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர் சாசுவத சாந்தியைப் பெறுவாராக.

ஓம்.

சென்னை அகத்திய குருகுலம்

சாது நாராயண தேசிகர் மடாலயம்

## சுவாமி அருணகிரி நாதர் பாடியன

### அறுசீர் விருத்தம்

வல்லநகர் செய்தவத்தால் வந்துதித்த மாமணியே மருந்தே நோய்தீர்
நல்லதமிழ் மருத்துவர்தம் நாயகமே நாவலனே நாடி பார்த்தே
அல்லல்செயும் பிணியனைத்தும் அறுதியிட்டுக் கூறிநல்ல அவுட தத்தால்
வெல்லுமருத் துவச்சரப வித்தகமந் திரமூர்த்தி! வீய்ந்த தென்னே?

உடலுறுநோய் போக்குதற்கும் உளமடநோய் நீக்குதற்கும் உலக மீதில்
கடல்குடித்த குருமுனியும் காப்பியனு மெனவொருதாய் கருவில் தோன்றி
இடர்செயுநோய் அகற்றியுயிர்க் கின்பருள்மந் திரமூர்த்தி! ஈண்டு மக்கள்
மடமெனுநோய் தீர்க்கமட்டும் வைத்தியலிங் கத்தைவிட்டு மறைதல் நன்றோ?

உச்சியின் மேற்கைகூப்பி உலகமெலாந் தொழும்பெரியோன் உயர்வொப்பில்லா
அச்சுதசற் குருமூர்த்திக் காலயம டாலயங்கள் அமைத்தாய் நாளும்
உச்சிதமெய்ஞ் ஞானியர்கள் ஒண்புலவ ராதியரால் உரைசெய் வித்தே
இச்சகத்தோர்க் கிதம்புரிந்த இல்லறஞானப் பெரியோய் எங்கே சென்றாய்?

செந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த சித்தமருத் துவச்சரபச் செம்ம லேநின்
மந்திரமூர்த் திப்பெயரை மறலியுங்கேட் டஞ்சுவனே வாயாற் சொன்னால்
முந்தைவினைப் பயனுகர்வு முயல்தவமும் முடித்தனைகொல் முனிவர் சாரும்
கந்தழிநன் னிலைபெறநங் கடவுளர்பாற் சென்றனையோகழறு வையா!

### வேறு

நோய்நாடி நோய் முதலை நுணுகிநாடி
நோயளவுஞ் சேயளவும் நோக்கி நன்றாய்

வாய்நாடி மலநீர்கண் வதன நாடி
வளிமுதலாம் ஓர் மூன்றின் வகைகள் நாடி

தாய்நாடி யின்வலிமை தன்னைநாடிச்
சாத்தியவ சாத்தியங்கள் தனையும் நாடி

சேய் நாடிப் பிணிதீர்நன் மந்த்ரமூர்த்தி!
செந்தமிழ்நா டுனைக்காண்ப தென்றோ ஐயா!

---

ஓம்.

## செங்கற்பட்டு செட்டில்மேண்டு

## உயர்திருவாளர். சுவாமி சுந்தரபாரதியாரவர்கள் பாடிய

### பஃறொடைவெண்பா.

—:O:—

அந்தகன் னெஞ்சுபடைத் தானைச் சிவனுதைத்த
அந்தகன் றன்னை யழைத்திங்கு—முந்தலூர்
தாக்கீது தந்து தயைதாட்சண் யஞ்சிறிதும்
பாக்காது போடா பயலேஎ!—நீக்கிவிட்
டோமுன்னை யந்த உயர்பதவி யைவிட்டுப்
போமுன்னை யென்றே புறக்கணிப்போம்—தோமென்னை
எக்காலத் தானோ இருபதாம் நூற்றாண்டாம்
இக்காலத் துக்கோ ரிமையுமிலா—யக்காகான்
மண்ணுலக மாந்தர் மனப்போக்கைச் சற்றேனும்
எண்ணுகிற தேபோலு மில்லையவன்—திண்ணமிது
பாரீர் அவன்மமதை பாழாஞ் சருவாதி
கார முறையைக் கடைப்பிடித்தான்—பாரீர்!
ஜனநா யகம்முளைத்துத் தக்க மரமாய்
வனமாய்ப் பரவி வருநாள்—எனஞாயம்?
ஊராரைக் கேளாமல் ஓட்முறைகை யாளாமல்
யாராரு மிக்க அவதியுற—சீரார்
தருவல்லத் தின்சுதனைத் தண்டமிழ்ச் செல்வப்
பெருவள்ள லைஞானப் பெட்பைத்—திருவுள்ளத்
தச்சுதனைப் பேணி யடிபணியு மாணவனைச்
சொச்ச மனங்கொண்ட சுந்தரனை— துச்சமெனக்
காசை நினைப்பானைக் கண்கலங்கி வந்திடுவோர்
மாசை யகற்று மதிமுகனை —மூசையிட்டு
சித்தர் முறைகளினால் சேணமருந் தைச்செய்து
எத்தகைய நோயு மிரிப்பானை—நித்தநித்தம்
மந்திரமூர்த் திப்பெயரால் வாயார நேயமெலாம்
வந்தழைத்துப் பேசும் வகையானை—இந்தவிதம்
மேன்மேலும் கூறவல மேன்மை யுடையானை
என்காணு மேமன்பிடித் தேகினான்?—கூன்வளைந்துங்
கண்ணிழந்துங் காதிழந்துங் கால்கை களையிழந்தும்
உண்ணுதற்குஞ் சோறின்றி ஓலமிட்டு—எண்ணமெலாம்
எப்போது சாவோ மெனவுழலும் பாமரரை
இப்பாரில் இன்னும் இருக்கவிட்டான்—அப்பப்பா!
ஆனாலு மிந்த அநியாயங் கண்டுதான்
ஞானானந் தம்பெற்ற நாதர்களும்—போனநாள்

ஆத்திரம் கொண்டே அறக்கடவு ளென்பானை
நேத்திரங்கெட் டானென்று நிந்தித்தார்—நீத்தவனும்
பொய்யா மொழியுமிறும் பூதெய்தி யோர்சொல்லை
மெய்யாக வேசொல்லி விட்டுவிட்டான்—ஐய!
ஒருருவ னுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

---

வல்லம் சித்தமருத்துவப் பெரும் புலவர் உயர் திரு,

மந்திரமூர்த்திப் பிள்ளையவர்கள் இறையொளியிற் கலந்தது

குறித்து ஆர்க்காடு ஸ்ரீ கண்ணன் திருச்சபையினர்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அந்தோமந் திரமூர்த்தி யரும்பெயரோ யெமைப்பிரிந்தே யகன்றாய் கொல்லோ
எந்தாயிங் குனைப்போல ஆர்க்காட்டு நாட்டினின் யாமெங்குங் காணேம்
பைந்தமிழ் செய்தவக்குறையோ பழந்தமிழர் செய்குறையோ பகரவல்லேம்
நொந்தனம்நின் பிரிவாலெம் நோயகல வுதவுவரியார் நுவல்க மாதோ!

ஆர்க்காட்டார் நின்பிரிவா லனையிழந்தார் போன்றலற வணுக்க மான
ஆர்க்காட்டு வல்லத்தி னருந்தமிழர் தங்கண்ணீ ராறு பாய
ஆர்க்காட்டுத் தமிழர்கடம் அணிநலமே நினைந்துதவும் அன்பு சான்றோய்
ஆர்க்காட்டி னுயிரனையாய் அந்தோநொந் தனம் பிரிந்தாய் அறமி தாமோ?

கரந்தைவளர் தமிழ்ச்சங்கத் துயிரன்பு பூண்டொளிர்ந்த கல்வி யாள!
கரந்ததமிழ்க் கலைகளெலா மொளிபெற நல்லுருவெடுத்தோன் கலைவல்லாளன்
சிறந்த பெரும் புலவன் வயித் தியலிங்கப் பிள்ளையுடன் பிறப்பாஞ் செல்வ!
சிறந்தநினை இழந்த பெருமிழப்பிற்கே உளத்திட்பஞ் சிதைகின் றேமால்!

உடன் பிறந்தா ரிருவருமை போன்றுயர்ந்தே யொற்றுமையா யுவப்ப யாரும்
உடன்பிறப்பை யோம்பியுறைந் தவரிலையென் றழுக்காறுற் றுயிர்கொள் காலன்
உடலிலிருந் துயிர்பிரித்தா னவன்கொடுமை யென்னென்றே யுரைப்பம் [நன்றே!
உடன் பிறப்பா யெமைப்புரந்தா யந்தோநின் பிரிவெமையே யுடற்று மாலோ!

உடற்கூற்று நாலிலுள நுண்மையெலா நுண்ணறிவா லோர்ந்தே யுற்ற
உடல்களெலாம் நோயின்றி வாழும் வகை மருந்தளித்தே யோம்பி நின்றாய்
உடல்களெலா முயிர்தாங்கிப் பன்னெடு நாள் வாழ்வதைக்கண்டுடன்று நின்றே
உடலிலிருந் துயுர்பிரிக்கு மறலியுநின் னுயிர்கவரு முரமென் னேயோ?

தமிழ்ப்புலமை படைத்தொளிர்ந்தோய் தமிழ் முறையின் மருந்தளிக்குஞ் சால்பு [மிக்கோய்
தமிழ்ப்புலவர்க் கேற்றபெரு மருத்துவனுய்த் திகழ்ந்திட்டோய் தகவொன் [றில்லான்
தமிழ்ப்புலவர் தனிவருந்த தமிழணங்கு தனிவருந்த தமியே மேங்க
தமிழ்ப்புலவர்க் கூன்றுகோ லானேய் நின் னுயிர்கவர்ந்தான் தருமனந்தோ !

இனிண்மநிறை யின்னுரைக ளுயிர்களுக்கே வழங்கியநீ இன்பே செய்து
இனிமையுடன் மன்னுயிர்க்கே யிருமருந்து முதவியவ ரேக்கம் நீங்க
இனிமைமிக நரைதிரையின் றின்னுயிர்கள் வளர்ந்தோங்கு மேற்றங்கண்டேம் !
இனிமை செயும் நின்னுயிர்தான் இறைவனடி யிணையொன்றி யிசைந்து வாழி!

இப்பாக்களையியற்றியோர்.

(காவலன் குடி)

திரு கோ. சி. பெரியசாமிப் புலவர்,

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

---

வேலூர் ஊரீஸ் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்

**திரு. க. ப. மகிழ்நன் அவர்கள், பி. ஏ. எல். டி.**

திரு. மந்தரமூர்த்திப் பிள்ளையவர்களை நேரிற்கண்டு பழகும் பேறும், நண்பர் வாயிலாய் அவர்களது போற்றற்குரிய பல பண்புகளைக் கேட்டறியும் பேறும், யான் பெற்றேன். அணுகியவர்க்கே தன் நறுமணத்தைத்தரும் இனிய மலர் போலே அவர்கள் தாங்கள் வாழ்ந்த சிற்றூரை விட்டகலாது தம்மிடத்து வந்தவர்கள் தம் சான்றுண்மைகாண வாழ்ந்தார்கள். தமிழ்ப்பற்றுப் பெரிது முடையவராய்த் தமிழ் அறிஞர்களைப் போற்றுவதிலும் ஊக்குவதிலும் இவர்கள் எஞ்ஞான்றும் பின் வாங்கியதில்லை. இவர்கள் எமை விட்டகன்றமை நினைந்து பெரிதும் இரங்குதும்.

---

சென்னை வேதாந்த சங்கத்தலைவர்

உயர்திருவாளர் வித்வான்

T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M. A. B. L., M. O. L.,

அவர்களியற்றிய

**இரங்கற்பா.**

பந்தனைகள் எலாம் கழன்று பரநிலையில் ஒளிர்ந்தபெரும்
மந்திரமா மூர்த்தியவர் வையமதை நீத்தகன்றே
இந்திரனூர் முதலோர்க்கும் இனியமருந் தவையளித்தே
அந்தரத்தார் வாழ்வதனை அமைவிக்கச் சென்றனரோ,

---

சென்னை வேதாந்த சங்கம்

வித்வான், உயர்திருவாளர், மோ. அ. துரைஅரங்கசாமிப் பிள்ளை

அவர்கள் பாடிய,

## அசீறுர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

1 உலகமெலா மொளிர்விப்போ னெருகதிரோ
னெனுமுறையை ஒழிப்பான் தோன்றி
இலகொளியால் அகிலமொ மிரவுபகல்
ஒழிவித்தே இனிதாய் மேவி
நலநடையும் நயவுரையும் நகைமுகமும்
சார்வாக நலமே ஆற்றி
மலமகன்ற மந்திரமா மூர்த்தியேனு
மாமணியே மறைந்தா யென்னே?

2 உடலோடு வாழ்வதினும் ஓதைமிகுங்
கடலில்விழுந் துயிரை நீத்தல்
கடனிலவாய் வாழ்தலினு லுறுமுவகை
தருமெனுளம் கன்று வோர்க்கே
கெடலிலவாந் திடவுடலைக் கேடில்பெருஞ்
செல்வமெனக் கீர்த்தி மேவ
மடனெழியப் பெறுகவெனத் தரவலமா
மருத்துவநீ மறைந்தா யென்னே?

3 சித்தவயித் தியசரபப் பெயர்வறுமை
உற்றிடவும் சேர்ந்தோ ரெல்லாம்
பித்தமிகுத் தறிவழிந்து பேதுறவும்
பிணிகளெனும் பீடை சான்ற
மத்தமிகுங் கரிகளெலாந் தேகமெனு
மடவிகளை வளரா வண்ணம்
தத்தமனம் போனபடி தாவியழித்
திடவுமிடந் தந்தாய் என்னே?

4 வல்லத்தில் நூல்வலனும் நாவலனும்
பாவலனும் வாய்ந்தோ னாகித்
கல்லொத்த நெஞ்சினையுங் கனிமொழியால்
கரைவிக்குங் கவின்சேர் வுற்றோன்

அல்லொத்த நோய்க்கடலில் ஆழாமல்
என்றென்றும் ஆநந் தஞ்சேர்
செல்வத்தால் உம்பியெனச் சேர்வைத்ய
லிங்கனவன் செருக்குற் றானே.

5 உன்றனைவிட் டொருகணமும் பிரிவறியான்
உம்பியென உணர்வா யேனும்
சென்றனைநீ யிவணவனைச் சிந்தைகலங்
கிடவிட்டுச் 'சிறிதும் என்றும்
என்றனிளங் கோவினைவிட் டகலேன்யான்'
என்றனைநீ ஏனோ பொய்த்தாய்
நன்றுதரும் பொய்யெனினும் வாய்மையிடத்
தடையினெனு நலஞ்சான் றாயோ?

6 நோய்வகையும் நோய்முதலும் நோய்போக்கும்
முறைமைகளும் நூலோ டாய்ந்து
வாய்மையுடன் வாய்ப்பச்செய் வள்ளலெனக்
கண்டதனால் மாண்பின் மிக்கோய்
ஆய்வுடைய விண்ணுலகோர் அன்புரையால்
போற்றவுடன் அவர்பின் னாகப்
போய்விடவுந் துணிவுற்றாய் போலுமெனத்
தெளியுமெமைப் புரப்பாய் நீயே.

---

சென்னை வேதாந்த சங்கம்.

உயர்திருவாளர் கா. பொன்னுசாமி நாடாரவர்களியற்றிய

**அறுசீர்க் கழி நெடிலடியாசிரிய விருத்தம்**

அழியாத பரமபத மேவிநீ யாநந்தம்
அடைந்திட் டாலும்
கழியாத அன்புடைய சுற்றமொடு நட்பினரும்
கலங்கா நின்றார்
பழியாது மிலாமந்த்ர மூர்த்தியுனைப் பாரிலெவர்
நிகரா வாரே
விழியார உனைக்காண இனியொருகால் இவ்விடத்தின்
மேவு வாயோ.

---

வாலாஜா தாலுக்கா, வரகூர் புதூர்,

திரு அறவள்ளல் அ. அண்ணாமலை முதலியார் அவர்கள்.

**திரு மந்திரமூர்த்திப் பிள்ளை** அவர்கள் வைத்திய முறையில் மிக கைதேர்ந்தவராய் எத்தகைய வியாதியாயினும் அவைகளனைத்தையும் மிக நுட்பமாய் ஆராய்ந்துகொண்டு, மருந்து கொடுத்து விரைவில் குணங்காட்டுவதில் நிபுணர். அவர் சிறிய கிராமமாகிய வல்லத்தில், பிறந்தாராயினும் அவரது திறமையின் கீர்த்தி நம்தமிழகம் முழுமையும் பரவி இருந்தது. எங்களூர் வரகூர், புதூர் முதலிய இடங்களுக்கு வைத்தியம் செய்ய வந்திருக்கின்றார். எங்களுக்கும் சிகிச்சை செய்திருக்கிறார். சொற் பிழையாமல் வந்து வைத்தியம் பார்த்து வந்தது சிறப்பிக்கத்தக்கது. அவரையும் அவரது சகோதரர் திரு. **வைத்தியலிங்கம் பிள்ளை** அவர்களையும் நன்குநேரில் அறிந்துள்ளேன். இரு சகோதரர்களும் ஒன்றி இருந்து **திரு அச்சுதானந்த சுவாமிகள்** குருபூசையை வருடாவருடம அதிகச்சிறப்பாக நடத்திவந்தார்கள். நோயற்றவாழ்வுக்கு உறுதுணையாய் **திரு மந்திரமூர்த்திப் பிள்ளை** அவர்களும், உடலெடுத்த பயன்பெறுதற்குக் கல்வி முதன்மையானதால் அதை அறிவிக்க திரு. **வைத்தியலிங்கம் பிள்ளை** அவர்களுமாக இருவரும் இரண்டு கண்களே போல் விளங்கி வந்தார்கள். அவர்களில் பெரியார் அவர்களை இழந்தமைக்கு ஒரு கண் சிதைந்ததோடல்லாமல் சுகத்தையும் பறிகொடுத்தோம் எனலாம். எல்லா மக்களுக்கும் பரோபகாரியாய் விளங்கிய **அப்பெரியார்** அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தமைக்கு மிக வருந்துகின்றேன். அவரது சகோதரர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இறைவன். **பெரியார்** ஆவிக்கு நற்கதி அளிப்பாராக.

---

செங்கம் போர்டு உயர்தரப் பாடசாலை

**சரித்திர ஆசிரியர்**

உயர்திரு, **S. அருணசலம் பிள்ளை,** பி. எ., எல். டி., அவர்கள்.

காலஞ்சென்ற வல்லம் சித்தவைத்திய சரபம் உயர்திரு. மந்திரமூர்த்தி பிள்ளையவர்கள் என்றும் புகழுடம்புடன் விளங்குவாரென்பது திண்ணம். காந்தியடிகள். டாக்டர் அரே அவர்களையும், தென்னிந்தியாவில் பலர் டாக்டர் குருசாமி முதலியார் அவர்களையும் நம்பி யிருத்தல் போலத் தமிழ் நாட்டில் ஆதரவற்ற அநேகர் அருமருந்தேபோல் நம் சித்த வைத்தியப் பெரியார் அவர்களை நம்பி யிருந்தார்கள். இவருடைய நேர்மை, திறமையாதிகளைக் கேட்டு இப் பெரியாரின் பேருதவி தங்களுக்கே இருத்தல் வேண்டுமென்னும் சுயநல எண்ணத்தால் இந்திரனாதியர் செய்த சூழ்ச்சியால் இவர் விண்ணுலகிற்குச் செல்ல நேரிட்டதெனத் தோன்றுகிறது. இவரைத் தமிழகத்தார் என்றும் மறவாதிருத்தற் பொருட்டு, வல்லம் கிராமத்தில் "மந்திரமூர்த்தி சித்த வைத்தியசாலை" என ஒன்று நிறுவுவது இன்றியமையாததாகும். அதுவே இவரின் உருவச் சிலையுமாகு மென்பது எனது அபிப்பிராயமுமாகும்.

---

வேலூர் ஊரிஸ் கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர், உயர்திரு

C. S. இராஜாப் பிள்ளையவர்களியற்றியது

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மண்ணுலகிற் புகழ்மிகவே மருவுதொண்டை
நன்னாட்டின் மல்கு சீர்த்திக்
கண்ணமங் கலமடுத்த கவின்வல்ல
நகர்வந்து கல்வி யோடு
எண்ணரிய மருத்துவமு மினிதுணர்ந்து
பல்லோர்க்கு மினிய செய்து
நண்ணரிய சீர்பெற்று நல்வாழ்வு
நடாத்தியஎம் நலஞ்சேர் நண்ப!

மந்திர மூர்த்தி யென்னு மாணுறு பெயர்சாலைய
அந்தர மேவி யாங்கண் அருமருந் துதவு மாறு
சிந்தனை செய்திட் டாயோ சிவனடி சேர்ந்திட்டாயோ
எந்தனைப் பிரிந்த தென்னே இயம்புவா யியம்பு வாயே.

கல்வியிற் பெரியன் சீலன் கற்றவர் புகழு நேயன்
மல்கிய புகழின் மேலோன் மாபெரும் புலவ னென்று
சொல்லுநல் வைத்திய லிங்கச் சோதரன் தன்னை நீங்கிச்
செல்ல நீ நினைத்த செய்கை சீரிதோ செப்புவாயே

உன்னருமை மைந்தர்களும் உளமுவந்த
நண்பினரு முனைக்கா ணாதே
இன்னலுற விந்நிலத்தின் வாழ்விகந்து
ஈசனடி நாடிச் சென்ற
மன்னியசீர் நிறைமந்த்ர மூர்த்தியெனும்
பேர்நிலவு மணியே உன்னை
இன்னுமொரு முறைகாண எம் போல்வார்க்
கியன்றிடுமோ இயம்பு வாயே.

---

ஆம்பூர் கன்கார்டியா போதனாமுறைக் கலைக்கழகத் தலைமைத்
தமிழ் ஆசிரியர்

பாலகவி. திருவாளர் ஆ. மா. சிவஞான முதலியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

இச்சகத்தின் இருண்மாயை இரியவிரு வினைமுறிய எழும்பல் வேட்கை
அச்சமறத் துறந்தபுகழ் அச்சுதா னந்தனடிக் கன்பு சான்று

இச்சைமிக உவளகமும் எழின்மட்மும் எடுத்துவிழா யாண்டாண் டென்றும்
உச்சிதமா யியற்றியசீர் உறுமந்த்ர மூர்த்திதனை ஒப்பார் யாரே,

வேறு

தண்டமிழின் தனிக்குரிசில் வைத்ய லிங்கன்
தமைய னெனத் தன்னிகரில் தகைமை சான்றோன்

அண்டரமு தனையதமிழ் அறிவின் மிக்கோன்
ஆர்த்தசபை பார்த்தெவரும் ஆர்த்தி மேவக்

கொண்டலெனச் சொன்மாரி கொழிக்குஞ் செம்மல்
கூரறிவிற் பிறர்நலமே குறிக்குங் கொற்றன்

தண்டலில்சீர் வல்லநகர் சித்த வைத்ய
சரபமெனும் புகழ்மந்த்ர மூர்த்தி மன்னே;

வேறு

சாரும் ஒருமை யுணர்ச்சியுடன் தாய்நாட் டெழிலை நிலைநாட்டும்
தக்கோன் அரிய மருத்துவத்தில் சதுரன்மதுர மொழியழகன்

பாரும் விசும்பும் பரவுமொரு பரமனடிகள் பரிந்தேத்தும்
பரிசிற் சிறந்த பண்புடையான் பளகில் குணங்கள் பலமலிந்தோன்

சீரும் சிறப்பும் திகழ்சித்த வைத்ய சரப மெனவிளங்கும்
செம்மல் மந்த்ர மூர்த்திநலம் செழிக்கு யாசிப் பிரமாதி

சேரும் செவ்வாய் முதற்பானுள் செறியை யரைநல் லோரையரன்
திருத்தா ளடைந்தான் அவன்புகழ்தான் செகமீதென்றும் வாழியவே.

---

ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் மாணவருள்
ஒருவரும், வேலூர் ஊரீஸ் கல்லூரி உதவித் தமிழாசிரியருமாகிய

**திரு. கீ. வேணுகோபாலன் அவர்கள் இயற்றிய**

**நிலைமண்டிலவாசிரியப்பா.**

பண்டைத் தமிழர் பரவும் புகழ்சால்
தண்டக நாட்டில் நாக நதிசார்
வல்லமா நகர்வாழ் வண்குடிப் பிறந்த
சொல்லரும் வைத்திய! துகளறு தோன்றல்!
மந்திர மூர்த்தி! மந்திர மூர்த்தி!!

சுந்தர குணஞ்சேர் சுகுண வடிவே!
எச்சுகம் உலகம் எய்தல் வேண்டும்
அச்சுகந் தன்னை யளித்தற் கெனவே
இச்சகம் மித்தையென் றெளிதாய்க் காட்டும்
அச்சுதா நந்த னடியிணை சார்ந்து
ஆய்வன வாய்ந்து அறிவில் நிலைத்துச்
சாய்வன சாய்த்துச் சற்குரு சேவை
ஆற்றற் கச்சுதன் ஆலய மமைத்துப்
போற்றி நிதமும் பூசை யாதியாம்
நற்குரு பூசையும் நன்றே நடாத்திக்
கற்றவர் விரும்புங் கனிமொழி மொழிந்து
மற்றவ ரெவர்க்கும் மருந்தென விருந்து
பற்றுநோய் கழிக்கும் பகரகத் தியனே
தன்வந் திரியோ தேரையர் தானோ
என்றெவ ருஞ்சொல எழில்வைத் தியரெனும்
பட்டமே பெற்றுப் பாரில் விளங்கினை,
நட்டநின் மறைவால் நேர்ந்தன நவில
எடிடந் தருமோ! என்னு லாமோ!
கூடின கூறின் குறையே செய்தேன்
மாண்டநின் னறிவும் மருந்துநூற் பயிற்சியும்
தீண்டுகை நாடியின் திறம்புகல் திருக்குறள்
"நோய்நாடி" என்றே நுவலற் கிலக்கியம்
வாய்மொழி சான்ற வல்லுநர் அடியார்
தாய்மொழி போற்றுந் தகையரைக் காணின்
பாய்கீழ் நீரெனப் பரிவொடு போந்து
எற்றுப சரிப்ப தியம்புந் தரமோ!
போற்றுநின் செயலெலாம் புகலற் பாற்றே!
உண்மை வண்மை உறுதியே கோடல்
எண்மையா யெவர்க்கும் எளிவந் துதவல்
புண்ணியச் செயல்பல புரிந்தே நிற்றல்
தண்ணளி யுடனே தம்பியர் போற்றல்
கண்ணிய தந்தைதாய் கடமை யாற்றல்
உண்முகத் தெய்வ முகந்தே துதித்தல்
இவையே யன்றி இனியொன் றுரைப்பேன்
அவைமிகு கல்வி அணிந்துரை யாற்றும்
வளஞ்சால் கல்வி வைத்திய லிங்கன்
இளவலாய் நிற்ப ஏற்றம் மிகுந்து
உளத்தி லவனை உயிரெனக் கொண்டு
களங்கமற்றே கலந்திரு வீரும்
ஒருயி ரென்ன உடலிரண் டாகிப்
பாருளா ரிராமன் பரதன் என்ன
சீரிய முறையிற் சிறந்த தம்பிதன்
நேரிய கல்வி நிறைகுணம் செல்வம்
உயிருமாய் நின்றநின் னுருவம் நோக்கிப்

பயில்தரு தந்தையே பகரறு செல்வமே
என்றுநின் றேங்க எய்தினை வியோகம்
என்னையுந் துணைவன் எனக்கொண் டதனால்
மன்னிய மாட்சி மதிப்பும் பெற்றேன்
பன்னரு முன்புகழ் பாரிடை மிளிர
உன்னரு உருவமே ஒளிந்த தீங்கே
உன்னையே நம்பி உயிர்வாழ் மனைவியும்
பொன்னையே நிகர்பெண் மக்களும் மைந்தரும்
என்னையா! வெங்குற்றமுயென வேங்கவும்
தன்னிலை தன்னைத் தணவா தெய்தி
முன்னிலைச் சுட்டற முன்னவன் சற்குரு
கோவடி வேலன் கூறரும் பாவனை
மேவருந் தியானம் மேவி நற்குரு
அச்சுதா நந்தன் அடியிணை மறவா
மெய்ச்சுக மெய்தி மிளிர்கவெம் முடனே.

---

### வித்துவான் திரு. வே. ஐயாநாயக்கர் அவர்கள்

தமிழாசிரியர், போர்டு உயர்தரபாடசாலை ஆரணி.

#### அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தொண்டைவள நன்னாடு சான்றவர்கள் உடையதெனுஞ் சொற்குச் சான்றாய்
பண்டைவளம் புகழ்நிறையும் வல்லநகர் பனையனருள் பண்பு மிக்காய்
எண்டருநல் வைத்தியத்தில் இவ்வுலகில் இணையாவர் எவரு மில்லென்
றண்டருல கடைந்தனையோ அறைவாய்மந் திரமூர்த்தி அறிஞர் ஏறே.

வல்லமெனும் பெயரறியார் வைத்தியநூர் வைத்தியலிங்கம் வாழூர் என்பார்
வல்லமிக முயன்றுசெயு மாதவம்வ டார்க்காடு வாழும் மாந்தர்
வல்லமையாற் புரிதவத்தின் வடிவமென வந்துதித்தாய் மந்த்ர மூர்த்தி.
வல்லவாரர் வைத்தகன்றாய் வைத்தியத்துக் கினியுன்போல் வருவா ருண்டோ.

நோய்நாடி நோயின்முதல் நுணிகியா ராய்ந்தந்த நோய்த ணிக்கும்
வாய்நாடி வாய்ப்பவே செயலென்னும் வள்ளுவனார் வார்த்தைக் கேற்ப
சேய்நாடு களிலிருந்து தேடிவரும் பிணியாளர் தேகக் கூறும்
நோயுமதன் முதலுமறிந் ததுதணிக்கு முன்னோன்மை நுவலற் பாற்றே.

வல்லமெனும் ஊரைடந்தார் பசிபிணிக்கு மருந்துபெரும் வாய்ப்பொன்றேயோ
தொல்லைதரு முயிர்ப்பிணிக்குச் சுகமருந்து பெறலாகுந் தூய நின்பால்
நல்லறிஞன் வைத்தியலிங்க நாவலன்பாற் செவிக்குணவு நண்ண லாகும்
அல்லலுறும் பவப்பிணிக்கச் சுததாச ரடிமருந்தே யடைய லாமே.

அச்சுதா நந்தரடை யத்தலத்திற் பெருங்கோயி லமைத்தென் றென்றும்
மெய்ச்சுதராய்த் திருத்தொண்டு விளங்கவமைத் தறச்சாலை மேலும் ஓங்க
நிச்சயமாய் ஆண்டுதொறுங் குருபூசை சொற்பொழிவு நிலைக்கு மாறு
மெச்சுநிலை மாகேச பூசையெலா மிளையருடன் மேவிச் செய்தாய்.

அந்திலடைந் தோர்க்கினிய வாயுணவிற் கறச்சாலை யமைத்தீர் மற்றும்
வந்தபிணி யாளருக்கு வைத்தியசா லையானுய் மந்த்ர மூர்த்தி
செந்தமிழ்ப்பல் கலைச்சாலை யாய்வைத்ய லிங்கன்றருஞ் செவிக்கு ணவே
பந்தமிலச் சுதன்கோட்டம் பத்திமுத்தி சாலையெனப் படைத்திட் டீரால்.

பெரியவரெங் கெனவினவி லிளையரொடச் சுததாசர் பெரிய கோயில்
அருகிலுளார் எனவுரைப்பார் அவண்வரிற் கோ புரவாய்தலதனின் முன்னே
பிரிவீராய் இருவீரும் பிரியமுட னினிதமர்ந்து பேசக் காண்பேம்
உரியவிரு வீருமினி ஒருங்கிருத்த லிவண்காண்ட லொண்ணு மோயாம்

இளையார்தம் பொன்னுடல்தான் இளைப்பதுகண் டினிப்பேச எங்கும்சென்று
களையாதே யிம்மேனி கரையுமெனக் கனிந்துரைத்துக் கண்போலெண்ணிச்
சளையாமல் காலமறிந் துணவளித்து மருந்தளித்துத் தாய்போற்காத்தாய்
வெளியேகின் வழிபார்ப்பாய் இனியவரைக் காப்பதெவர் வேலை அண்ணல்.

ஏழைகட்கு மருந்தளித்துப் பத்தியத்துக் கரிசியிலை யென்ன வேங்கின்
பீழைதரும் பசிப்பிணிக்கும் மருந்தளித்துக் காத்தனையே பெரிதும் ஐயா
பாழும்விதி வந்துன்னைப் பற்றியதோ வன்றியிங்குப் பரிதவிக்கும்
கோழைமக்கள் வயிற்றிடையே குற்றியதோ ஏதுரைப்பேம் குணக்குன்றானாய்.

ஈரோட்டுப் பெரியாராய் எக்குலமும் ஒருகுலமே என்னும் நீதித்
தேரோட்டும் உயர்ராம சாமியார்த் தினம்புகழும் சீர்த்தி யானே
காரோட்டும் கொடையானே கனிந்தவருள் மொழியானே கவின்ற நாடிச்
சீரோட்டங் கண்டறிந்து தெளிக்குமவ யாரிங்குச் செப்பி டாயே.

அகம்நாடி வருபவர்கள் அறிஞர் அறியார்பகைவர் அன்பர் என்ற
வகைநாடா தியாவருக்கும் மருந்தளித்தே யுயிர்காத்து வருசஞ் சீவி
தகவெனக்குச் சுகமுரைக்கத் தனியொருநாள் வருகவெனச் சாற்றினாய் அச்
சுகவழியைக் கேட்கவந்தேன் நிற்காணேன் என்செய்கேன் சொல்லாய்
[அண்ணல்.

பரம்பரையாய் வருவைத்யம் பாலிக்கப் பலமுறையும் பயிலச் செய்து
திறம்பெறவே நுண்ணுணர்வு சேர்சுப்ர மண்யனெனும் சேயைத் தந்தாய்
வரம்பெறுசெந் தமிழ்வளர்க்க வைத்யலிங்க னாந்துணைவன் வாய்க்கப் பெற்றாய்
உரம்பெறுமுன் றனைப்போல உறுதியுற்றே யிவ்வுலகி லுயர்ந்தார் யாரே.

## நாட் குறிப்பு.

பிரமாதி மாசிமுதற் பேர்நாட்செவ் வாயேர்
பிறையா றசுவனியிற் பெற்றான்—பெருவல்லம்
மந்திர மூர்த்தியாம் மாபெரியோ னச்சுதா
நந்தனருள் உண்மைநிலை நன்கு.

---

## வித்வான் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

தமிழாசிரியர், போர்டு உயர்தரப்பாடசாலை ஆரணி.

### சோச்சகக்கலிப்பா.

1 நீர்வளத்தி னோங்கி நிலவுகண்ண மங்கலத்தைச்
சார்வடக்கி லாறும் கடங்காவுஞ் சூழ்ந்துமிகும்
ஏர்வழக்கங் குன்றா தினிதொளிரும் வல்லத்தே
பேர்வழங்க வாழ்ந்த பெரியோய்! பிரிந்தனையே!

2 மருத்துவநூல் வல்லார் வழிப்பனையப் பிள்ளைதவக்
குருத்துநிகர் ஆறு குமாருளே முற்பிறந்தோய்
திருத்துசெவி யறிவானுந் தேர்ந்த புலம்ஆர்ந்தோய்
வருத்துபிணி யெல்லோர்க்கும் மாய்த்தோய் மறைந்தனையே.

3 வேண்டார்வேண் டியவரிவர் விற்பன்னர் கற்பொழிந்தார்
தீண்டார்என் றெண்ணுச் சிறப்புடனே எஞ்ஞான்றும்
ஆண்டானைப் போன்றிங் கனைத்துயிர்க்கும் பிணியகற்றி
மாண்டானே யாண்டு மறைந்தாயோ கண்டிலனே.

4 காசுமருந் தன்றுசுகங் காட்டுமருந் தென்றுநலம்
பேசுமருந் தாலே பிணிதீர்க்க வல்லாயே
பூசுமருந் தாம்வெண் பொடிமேனி பூண்டொளிருந்
தேசுமந்த்ர மூர்த்தியுனைத் தெரியாதார் ஆருளரே.

5 நோய்வருத்தம் நீங்கும் நுணுக்கங்காட் டின்மொழியும்
தாய்நிகரும் மெய்யன்பும் சாதிசம யங்கடந்து
தூய்மையுள்ளத் தாறபலர்க்குந் துயர்தீர்த்த பெற்றிமையும்
வாய்மொழிய நெஞ்சுள்ள வள்ளால் மறைந்தனையே.

6 செல்வரிவர் என்று தெரியுங்கால் அன்னவர்கைப்
பல்வளத்தை வாங்கிப் பலரேழை மக்களுக்கு
நல்வழக்கஞ் செய்த நனியிரக்க நெஞ்சினனே
கல்வடிவை யாங்காண கடிதிற் கடந்தனையே.

7 உண்டிகொடுத் தோரே உயிர்கொடுத்தோர் என்றதனைக்
கொண்டிருந்து பல்லோர்க்குங் கூழுஞ்சோறுங் கொடுத்துக்
கண்டிருந்துள் ளோகைக் கடலிற் றிளைத்த நினைப்
பண்டிருந்த வாறினியாம் பார்க்கத் திகழ்வாயோ ?

8 குருவடிவா யீண்டுக் குலவியருள் செய்துபின்னர்
அருவமென நின்றருளும் அச்சுதா நந்தருக்குள்
உருவமொன்று கோயி லுஞற்றியமைத் தேத்திஅவர்
திருவருளான் நீயுஞ் சிறப்பிற் றிகழ்ந்தனையே.

9 அத்துவித மார்க்கத் தனைவோர்க்கெளிய முறைப்
பத்துதவு கீர்த்தனங்கள் பாடிக் கதியுறுத்திச்
சித்துருவா யோங்கித் திகழுமச்சு தாநந்தர்
மெத்துணர்விற் சீடனெனல் மெய்யாக்க மேவினையோ.

10 தேனோபா கோகண்டோ தீங்கரும்போ யாதுமொவ்வா
ஞானோப தேசம் நண்ணியதை நடோறும்
வானோர்க்கும் வாய்க்காத மாண்பெய்து மாறோதி
ஊனோடும போழ்தும உரைத்துடலை ஒழித்தனையே !

11 பெற்றவரை நீங்கிப் பின்பிறந்த தம்பியருட்
கற்றவனை நீங்கக் கருத்தின்றி யித்துணைநாள்
உற்றவரிற் சால வுயிரோம்பி வந்தனையே
நற்றவனே ! நீஎன்இந் நாளிற் றுறந்தனையே ?

12 ஓராவி யீருடலா யுன்றம்பி நாவலனோ
டாராலும் வேறு யறியா வகையிலங்கிப்
பாரார்செந் நாவிற் பகர்மந் திரமூர்த்திப்
பேராளா ! அப்பேர் பிழையாவா றுயினையே !

13 பரதனையி ராமனையிப் பாரார்பார் என்றுரைத்தார்
விரதமிகு நின்னையுநின் மெய்த்துணைவைத் தியலிங்கச்
சரதனையும் அவர்நிகரார் சார்ந்திலரோர் தாய்வயிற்றில்
சுரதமுறும் நினைப்பிரியாத் துணைவரைநீ பிரிந்தனையே !

14 இளவலைக்கற் பித்ததுவும் இணைபிரியா துற்றதுவும்
வளவயலுங் காவும் வழங்கியதுங் கோயிலுக்கே
அளவறுசெல் வங்கள் அளித்ததுவும் முத்திபெறும்
உளவறிந்தோ? நீஇவ் வுலகறிந்தோ? சான்றோனே!

15 எங்களுளம் எங்க இவண்நீ இலையெனினும்
அங்கண்அறி வாகி அமைதியுற்று வாழியநீ
துங்கவனே! தக்க துணைவாமந் திரமூர்த்தீ
திங்களணி வேணிச் சிவனடிக்கீழ் வாழியவே.

---

பெங்களூர் ரா. ப. ஆ. நா. மு. உயர்நிலைப்பள்ளி

தலைமைத் தமிழாசிரியர் உயர்திரு. R. சின்னு நாயகரவர்கள்.

உள்ளத்தை யெள்ளளவும் விட்டகலா வல்லத்தின் பெரியார் வைத்திய சரபத்தின் பிரிவைக்கேட்டுப் பெரிதும் வருந்தாதாருண்டோ! வல்லத்தின் ஓர் கண் வைத்தியச் சரபம். மற்றோர் கண் வைத்தியலிங்கம். என்னே வல்லம் பெற்ற பெருமை!

வறியோர், வளம்மிக்கோர் என வேற்றுமையின்றிப் பிறர் நோய் நீக்கிய பெருந்தகையும், பழவினை நோயையுங்கிழமைக் காட்சியால் நீக்குங்கண்ணுடையாரும், பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்கண்டு கலுழுங்கண் போன்றவரும், நோய் நாடி நோய் முதனாடி யதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்செயும் வைத்தியரும், வல்லம்வதியும் நல்லருந்தமக்கை யில்லிருந்து பள்ளிப்பயிலுங் காலத்தென்னோய் நீக்கிய இறைமகனும், தமிழ்ப்பயின்றோர் யாவராயினுந் தண்ணளிகொண்டு அன்பொடு ஒழுகும் அண்ணலும், தமிழர் வாழ்வுக்குள்ளக் கருத்தோடு ஒழியாத்தொண்டு உளுற்றிய உத்தமரும், அச்சுதன் கழலடி நச்சியே நாளும் அமர்ந்திடும், அடியாரும், எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கும் எண்ணமுடையாரும், பல்லோர்புகழும் நல்லியற் புலமையைத்துணையாகக் கொண்டவரும் ஆகிய பெரியார் தம் நல்லுயிர் எல்லையிலா இறையருள் ஒளியில் இனிது வீற்றிருக்குமாக.

---

சித்தூர் மிஷின் ஹைஸ்கூல் தமிழாசிரியர்

உயர்திரு. பூ. ஸ்ரீநிவாசலு நாயுடவர்கள் இயற்றிய

விருத்தம்

அந்தகனே யோகொடியா யாவாயுன் னாட்கள்பணி
மாற்ற நாளும்
விந்தையுறக் கொடுநோய்கள் போக்கியெவர்க் கும்முதவு
மேன்மை கண்டோ

மந்திரமூர்த் திப்பெயர்மா வைத்தியகே சரியைக்கொண்
டேகினு யால்
நொந்துமனம் பின்னேன்வைத் தியலிங்கன் நொய்மையுற
வேகைக யற்றே.

---

வித்வான் திரு. A. S. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், ஊரிஸ் கல்லூரி, வேலூர்.

ஆசிரியப்பா.

அமிழ் தினு மினிய தமிழ்மொழி சிறந்த
சான்றோர் வதியுந் தொண்டை நன் னாட்டில்
ஆன்றோ ரென்று மவ்வப் போது
தோன்றிக் கடவுள் துகடீர் நிலையை
மன்பதைக் குணர்த்தி மாண்புறச் செய்வர்
அச்சுதா னந்த அருளுரை யடிகள்
தெய்வம் பழுத்த சீர்வே தாந்தக்
கொள்கையை மக்கள் குறிப்பாற் றெளிய
உணர்த்திய வுரையை யுளத்தே கொண்டு
அன்னவர் மாணவ ராகி யமர்ந்தோய்!
பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கு மென்ற
பெருநெறி பிடித்தே பிறங்கிய மேலோய்!
மந்திர மூர்த்தி யெனும்பெயர் மாண்போய்!
மக்கள் நோயை மருத்துவ நூற்படி
தக்க வாறே தணிக்கும் பெரியோய்!
உண்மையு மன்பு முடன்பிறப் புரிமையும்
தாய் மொழிப் பற்றும் தகுதியாய்க் கொள்ளும்
வைத்திய லிங்க வள்ளலா மிளவலைத்
தனியே யிருத்தித் தானே கினையே!
மன்பதை கட்கே மருந்ததை யுதவி
தீரா நோயைத் தீர்த்து இறப்பை
நீக்குவ தறிந்து நீலக் காலன்
கருக்கொண் டுன்னைக் கவர்ந்தே கினனே!
தாயாம் பிறவா தனிமுத லதனைத்
தாய்மொழி பேணும் தகுதியை உசாவி
தாயாந் தமிழை தனியரி யணையில்
தழைக்கச் செய்யத் தானே கினையோ?
ஈதென வெம்மனோர்க் கியம்பலுகின் கடனே
இருப்பினு மிறைவனே டிரண்டற விருந்து
வாழிய மருத்துவம்! வாழியநின் குலன்
வாழிய தமிழ்மொழி வாழ்க நம்நாடே.

---

செங்கம் போர்டு உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழாசிரியர்
**திரு. கோவிந்தராஜ நாய்க்கரவர்கள் இயற்றிய**

**எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.**

என்னையருள் தந்தையினு மேற்றமிகு மெந்தாய்
ஏயபல பேருதவி யென்றனுக்கே கண்டாய்
அன்னையினு மென்னிடமிக் கன்பமையு மன்னே
ஆக்ககலை மேவவெனை யூக்கியநற் றேவே
பொன்னனைய நன்மொழிகள் புந்தியுறப் புகல்வோய்
பொய்யகலுஞ் சீர்மந்த்ர மூர்த்தியெனும் அண்ணல்
உன்னுடைய பதமலரைச் சென்னிமிசை வைத்தே
ஓதுவத லான்மற்றிங் கேதுமறியேனே,

செந்தமிழின் நாட்டவர்முன் செய்ததவப்பயனே
திகழ்சித்த வைத்தியநூற் செழுங்கலைசேர் திங்காள்
எந்தவகை யாயகொடு நோயினரு நேரே
எய்துவரேல் ஆய்ந்தகற்றற் கேற்றவறி வோனே
சிந்தையினி லச்சுதன்றன் சேவடியே கொள்ளும்
திட்பமுடன் நுட்பநிலை சேருமெழிற் செம்மால்
எந்தவகை யாலுனது சீர்த்தியினை யானே
எடுத்துரைக்க வல்லேன்மிக் கேற்றமுடை யோனே.

ஆசிரியன் அச்சுதனுக் காலயமுங் கண்டாய்
அடுத்தவர்தம் நோயகற்றி யாயுண்மிகத் தந்தாய்
மாசறுநின் குடும்பமதை மாண்புறவே செய்தாய்
வைத்தியத்தை வளம்படுத்தி வாழ்வுபெற வைத்தாய்
காசினியில் நின்புகழைக் கழிவறவைத் திட்டாய்
கருத்திசெயுமுறுதியினிக் கழறவுமொன் றுண்டோ
வாசிபெறப் பூரணமாய் மன்னியினி தென்றும்
வாழிய நின் சந்ததிகள் வாழிய வாழியவே,

---

**திரு. த. ரா. சம்பந்த முதலியார் அவர்கள்.**
தமிழ்ப் புலவர், தேசூர்.

**ஆசிரியப்பா.**

மஞ்சு தவழு மலர்கா வதனிற்
கிஞ்சுகம் பலவுங் கிள்ளை மொழியால்
அஞ்செழுத் தோத அமரா பொழிலிற்
கொஞ்சிடுங் கோகிலங் கோதற வுணர்ந்து

நஞ்சணி கந்தர னறுமலர்த் தாளை
நெஞ்சினிற் பதித்து நிலவுந் தொண்டை
வளங்கெழு நாட்டின் வல்ல மென்னும்
பலவளஞ் செழிக்கும் பதிக்க ணுதித்து
மன்னுயி ரனைத்துந் தன்னுயி ரென்னும்
பொன்மொழி யதனைப் பொன்போற் கொண்டு
நண்ணு மனமு நவையறு மாண்பும்
எண்ணருங் குணத்தோ டினிமையு மொழுக்கமும்
பன்னருஞ் சிறப்பிற் பலவளம் பெற்றுத்
துன்னருங் கேளிர் துகள்தீர் தவத்தோர்
ஆதுல ரறவோர்க் கறம்பல புரிந்தே
பாதக மொழிக்கும் பசுபதி யென்ன
உன்பால் வந்தோ ருடற்பிணி கெடற் பொருட்
டன்போ டவர்நில யறிந்துண வொருமருந்
தேதிலா ரினியரென் றெண்ணு துதவித்
தீதறு முளத்திற் நீங்குந் தீர்த்தோய்
இச்சுமை நீங்க இருநிலந் தன்னில்
அச்சுதாநந்த வடிகட் காலயம்
மந்தர மென்று மகிதலம் போற்ற
சுந்தர நகரில் தூக்கிய புனிதா
சந்ததம் நின்னைத் தணவிலா வுளத்தால்
வந்தனை புரியும் வைத்திய லிங்கரும்
பற்றெுன் றில்லாப் படர்கொடி யன்ன
சுற்றமுந் துணையுந் துயர்க்கடற் படிந்து
கரைகா ணமைற் கலக்கங் கொள்ளத்
தரையோர் கதறத் தயையே யின்றி
உன்னலங் கருதி உலகினை நீத்து
வந்தனை செய்தே வதிந்தனை யந்தோ
மின்னுசெஞ் சடையோன் விரைத்தாள்
மன்னுவாழ் வுற்றது மாண்பெனலாமோ.

---

உயர்திரு. ஈ. சிதம்பரம்,

கிளார்க்கு, டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் ஆபீஸ், ஆரணி.

வல்லநகர் ஸ்ரீமான் V. P. மந்திரமூர்த்தி பிள்ளை அவர்களை 12 வருட காலமாக நன்கறிவேன். பிள்ளை அவர்களுடைய களங்கமற்ற வுள்ளமும், கற்பவை கற்றபின் நிற்பவதற்குத்தக என்றபடி தூய நற்குணமும், எளியார் களுக்கு அன்புடன் உபசரிக்கும் உதார குணமும் வாய்ந்த சீலராவார். தமது முன்னோர்கள் பன்னிரண்டு தலைமுறையாக செய்துவந்த மருத்துவக் கலையைக் கொண்டு நமது தாய்நாட்டில் நோய்வாய்ப்பட்டுழலும் ஏழை மக்களுக்கும்

செல்வந்தர்களுக்கும் உயர்வு தாழ்வின்றி ஒரே படித்தான மெய்யன்புகொண்டு "நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்செயல்" என்ற பொய்யா மொழிக்கிணங்க ஆராய்ந்து தெளிந்து நன்மருந்தும் நன்மொழியும் ஈந்து பல்லாயிரக்கணக்கான நோய்வாய்ப்பட்டாரை உடல் நலம் உறும்படிச் செய்த வெற்றியை என்னென்று இயம்பவல்லேன். தம் மூதாதையார் விஜயநகரம் சம்ஸ்தானத்தில் மருத்துவ பயிற்சிக்காக பற்பல பட்டங்களை அடைந்ததுபோலவே பல அறிஞர்களால் **சித்த வைத்திய சரபம்** என்ற பட்டமும் ஒல்காப்புகழும் பெற்று நம்நாட்டுச் சித்தவைத்தியர்களில், ஒருவராகத்திகழ்ந்தும், கல்விக்கடலாகிய அன்பு அறிவு அடக்கம் மற்றுமெல்லாதுய நற்குணங்களும் வாய்ந்த பரதன் அன்ன சகோதரராம் வைத்திய லிங்கம் பிள்ளை அவர்களோடு அறுபத்திமூன்று ஆண்டுகளாகத் திகழ்ந்து இம்மண்ணுலக மக்களுக்கு செய்யவேண்டிய நல்லுபகாரத்தைச் செய்து முடித்து அழியாப் புகழ் பெற்று அகண்ட பரிபூரணச் சச்சித்தாநந்த அருட்சோதி தெய்வத்தினடி மலரில் ஆனந்த இளைப்பாறச் சென்றுவிட்டமையைக் கருதி நல்லுலகம் மிகவருந்துமே யாயினும் இறைவன் திருவுளப்படியே நடைபெறும் என்பது திண்ணம் இத்தகைய பெரியார் எமது நோய்க்கு வாய்ப்பச் செய்து உடல் நலம் குன்றுது போற்றி வந்தது எழுமையும் மறக்கற்பாலதன்றும். இப்புண்ணியசீலர் ஆனந்த நடராஜ பிரபுவின் குஞ்சித பாத நிழலில் என்றும் நிலைத்திருக்குமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி.

---

படைவீடு தேவஸ்தான தர்மகர்த்தர்

திருவாளர் R. S. ராமதேவ ரெட்டியாரவர்கள் இயற்றிய

**வெண்பா.**

அகத்தியனைப் போல்வான் அகத்தன்பின் மிக்கான்
மகத்துவஞ்சேர் மாமருந்தின் வண்மை தகத்தேருஞ்
சிந்தையனுய் வந்தவர்நோய் தீர்க்கும் திறமை பெறு
மந்திரமூர்த் திக்கிணையார் மற்று.

அச்சுதனைச் சார்ந்தங் கழியாத மேனிலையை
உச்சிதமாப் பெற்ற வொருவனே—இச்சகத்தின்
வாழ்வை வெறுத்திட்ட மந்திரமூர்த் திப்பெரியோய்
சூழ்வேமுக் கெங்குற்றுய் சொல்.

அச்சுதற்கோர் மந்திரமும் ஆய திருமடமும்
இச்சையுட னேபுனைந்த எந்தலே விச்சையுறு
மந்திரமூர்த் திப்பெயரோய் மன்னு மிடங்காணேம்
சிந்தை கனிந்தெமக்குச் செப்பு.

---

## திரு. K. P. தாண்டவராயன் கண்ணமங்கலம்

சித்தவைத்திய கலாவல்லுநராம் திரு. **பனையப் பிள்ளை** யவர்களின் தவப்பயனாய்த்தோன்றிய வைத்தியசரபம் பண்டிதபூஷணம், தீனதயாளு பெரியார், **மந்திரமூர்த்தி பிள்ளை** யவர்கள் இந்நிலஉலகை நீத்தார் என்னும் கொடுஞ் சொற் கேட்டவுடன் இடியேறுண்ட நாகம்போல் மனந்திடுக்கிட்டுவிட்டேன். ஒன்றுந்தோன்றாதவனாய்க் கண்கலங்கினேன்.

### ஏழைபங்காளர் !!

பெரியார் அவர்களோடு நெருங்கிப் பழகநேர்ந்த பலர் அவர் வாழ்க்கை வரலாற்றை உன்னுந்தோறும் மனமுடைந்தே தீருவர். இவர்பால் ஓர் சிறந்த தலைவர்க்குரிய அத்துணைச்சிறப்பும் ஒருங்கே மிளிர்ந்தது என்பது மிகையாகா எளியவர்க்கிரங்குவதில் இவருக்கொப்பார் ஒருவரும் இலர் என்றே கூறலாம். பெரியார் அவர்கள் வைத்தியத்தொழிலில் மிகத்தேர்ந்த நிபுணர் என்பதை யாவருமறிவர் இவ்வட்டாரத்திலுள்ள அத்துணை மக்களும் இவரை மிகச்சிறந்த பொக்கிஷமென்றே கருதினர். அப்பொக்கிஷத்தைப் பயன் படுத்திக்கொண்டு மகிழாதாருமுண்டோ! இவர் ஏழைமக்களிடம் நடந்து கொண்ட முறைகள் மிகச்சிறந்தனவே யாகும். மக்களின் மனதிற்குகந்த வண்ணம் நடந்து கொள்வர் கருணையும், அன்பும், ஆர்வமும் வழிந்தோடும். இவரிடம் வரும் ஒவ்வொரு நோயாளியும் மிகச்சுலபத்தில் குணமடைந்து சந்தோஷத்துடன் திரும்புவர். இவர் சொல்லும் ஒவ்வொரு கியாழச்சிகிச்சைகளும் அப்பிணியை வேரோடு கல்லும் என்பதில் ஐயமேயில்லை. பாமரர்கள் பன்னிப்பன்னிக்கேட்பினும் சாந்தத்துடன் சலியாது பதிலுரைப்பர். ஏழைகள் ஒரு காசும் செலவின்றிப் பிணியைத் தணித்துக் கொள்வர் என்றால் அவர் பெருமையை என்னென்றுரைப்பது. பெரியார மறைந்த பின்னர் மக்களடைந்த மனோ வேதனையையும் வாய் விடடலறியதையும் யாரே எழுத வல்லார் ஏழை பங்காளர் மறைந்தனரே என்று ஏங்காதவர் யார்?

### அஞ்சா நெஞ்சுடைத்தீரர்.

பெரியார் அவர்கள் **ஸ்ரீ அச்சுதாநந்த சுவாமிகளின்** மாணாக்கர்களில் முதன்மையானவர் என்பதை யாவருமறிவர். சுவாமிகளுக்குக் கோயில் முதலிய திருப்பணி செய்யுங்கால் நேர்ந்த இடையூற்றினைவரையின் ஒரு பாரதமாக முடியும். அச்செய்தியைப் பெரியார் அவர்கள் திருவாய் மூலம் சொல்லக்கேட்பின் கல் நெஞ்சுடை ஒருவனும் கலங்கியே தீருவான். அவ்வமயம் வல்லம் மக்கள், பூராவும் இவருக்கு மாறு பட்டே நின்றனர். இவர் ஒருவரே தன்னந்தனியராய் உயிரினையும் பொருட்படுத்தாது அஞ்சாநெஞ்சத்துடன் முன்வந்து அப்பணியை முற்றுவித்தனர். என்னே! இவரது தீரம்.

வாலிபரின் சிகரம் !

பெரியார் அவர்களுக்கோ வயது 64; அவர் உள்ளமோ ஓர் திறம்படைத்த வாலிபனின் உள்ளம் போன்றது. அவர் வாலிபர் சங்கத்தின் அங்கத்தினர் என்ற முறையிலுமட்டுமன்று. உழைப்பிலும், ஊக்கத்திலும், உணர்ச்சியிலும் 16-வயதுள்ள வாலிபனுக்கொப்பானவர். இக்கால வாலிபர்கள் உள்ளத்தில் தோன்றும் சுதந்திர தாகமோ, சுயமரியாதை உணர்ச்சியோ பிறரால் தூண்டப்படுவனவாம். பெரியார் அவர்கட்கோ அவை ஓர் ஊற்று நீர் போல் இயற்கையாகவே சுரக்கும் தன்மை வாய்ந்தனவாம். எத்தனையோ முறை என்னைப் போன்ற வாலிபர்களைப் பொதுப்பணியில் தூண்டியுள்ளார். வாலிபர்களுக்கு வழிகாட்டியாய் முன்னணியில். திகழ்ந்தார். வாலிபரின் சிகரம் சாய்ந்ததே என்று வாய் விட்டலறாத வாலிபருமுளரோ !

சமதர்ம உள்ளத்தினர்,

பெரியாரவர்களின் சமதர்ம நிலையை எண்ணுந்தோறும், எண்ணுந் தோறும், மனங்கலங்குகின்றது. பெரியார் அவர்களோடு மாலைப்பொழுதில், தனித்திருந்தும் இளைஞர் குழாத்துடனும் உரையாடும் பேறு நான் பலதடவையும் பெற்றதுண்டு. அக்காலை ஜனசமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வை நினைப்பார் எப்பொழுது மக்கள் சமநிலை அடைவர் என்று ஏங்குவார். ஜாதி வித்தியாசத்தை நினைந்து, நினைந்து மனம் புழுங்குவார். தாழ்த்தப்பட்டமக்களின் நிலையைக் கண்டு கண்ணீர் வடிப்பார். என்னே இவர்! தம் சமதர்ம உள்ளம்!

பொதுநலத் தொண்டர்,

சுமார் 20 வருஷத்திற்கு மேலாகவே பொதுநலத்தொண்டில் அவர் மனம் ஈடுபட்டிருந்ததை யாவருமறிவர். குறிப்பாகப் பத்தாண்டு தொடங்கித் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திலும், தமிழ் மக்களின் நலத்திலும் மிக அக்கறைகொண்டுழைத்து வந்தார். தமிழர் தலைவர் ஈரோட்டுப் பெரியார், **ஈ. வெ. ராமசாமி** அவர்களின் ஆணையைச் சிரமேற்றாங்கினர். ஈரோட்டுப் பெரியார், மக்கள் அனைவரும் சமம். உயர்வு தாழ்வு ஒழியவேண்டும். இன்றேல் தமிழ்நாடு தமிழருக்காகாது என்று கூறுவதைக் கேட்டு மனம் பூரிப்பார். அதற்காவன செய்வதிலும் மிகத்தீவிரப்படுவார். தமிழ் மொழியிடத்தும் மிக ஆழ்ந்தபற்றுடையவர். இந்தி நம் நாட்டில் நுழைக்கப்பட்டதைக்கண்டு தமிழ்மொழி கெடுமேயென அஞ்சியரற்றிய பெரியாருள் இவருமொருவர்.

இன்று இந்தி ஒழிந்ததைக் கண்டு களிக்கப் பெறாது போயினரே என்று தான் என்போன்றார் ஏங்கியேங்கி இதயங்கலங்குகின்றனர்.

பொறுமைக்களஞ்சியம்,

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பது தமிழ் நாட்டுப்பழமொழி. அதனையும் பொய்யென நிரூபித்தவர் நமது பெரியார். இவர் பொறுமையினி

ன்றும் தவறிச்சினந்த துண்டோ வென்று துருவித்துருவிப்பார்த்தேன். எக்காலத்தும், எப்பொழுதும், எவ்விதத்தும் இவர் பொறுமை இழந்ததாக நான் அறிந்து கொள்ள முடிய வில்லை. இவர் தம் குடும்பத்திலேயே இவருக்கு நேர்ந்த இடுக்கண்பலப்பல. தாங்கொணுமனக் கஷ்டங்கள், சகிக்கொணுத் துன்பங்கள் அடுக்கடுக்காக நேர்ந்ததுண்டு அக்காலத்தும் இவர் அவற்ருல் எட்டுணையும் கலங்கினரில்லை. பெரியார் மேற்கொண்டிருந்த தொழிலோ அனைவருக்கும் ஆபத்துற்ற காலத்திற் பயன்படுவது. இதை இவர் முற்றும் உணர்ந்திருந்தார் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. எதிரிகளையும் அவர் தம் நண்பர்களைப்போன்றே பாவித்தார். ஆபத்துக்காலத்தில் உதவினர். அத்தகைய குடும்பங்கள் இன்றும் பலப்பல உண்டு என்று சொல்லுவது மிகையாகாது. உதாரணமாக ஒன்றைக்கூறினும் போதுமென்றே நினைக்கிறேன். சத்துரு அச்சுதானந்த சுவாமிகளின் வழக்கில் தமக்கு எவ்வளவு இன்னல்களை செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்துவந்தவர்களை யெல்லாம் கூட இவர் ஆயுள்காலம்வரை நேசித்துவந்தார். உற்றசமயங்களில் உதவினர் என்ருல் இவர் தம் பெருமையை என்னென்றியம்புவது! எவ்வண்ணம் எத்திப்போற்றுவது!

இத்ததுணைச்சீரும் சிறப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற குணக்குன்றினை! அன்புததும்பும் அழகிய திருமுகம் வாய்ந்தவனை, இளைஞர்களோடு அளவளாவிப்பேசும் இனிய சொற்களுடையானை! ஏழைபங்காளனை! வாலிபர்தலைவனை. ஒத்தநில அண்ணலை, பொதுநலத் தொண்டனை என்றுகாண்போம் பெரியீர் முறைந்திரே இம்மண்ணுலகை வெறுத்து இனி எங்கட்டுத்துணைவர்யார் என்னே கூற்றுவனின், கொடுமை! கொடுமை! கொடுமை, பெரியாரின் பெரும் புகழ் என்றும் நிலைபெறுவதாக!

---

குடியேற்றம் : மு. அண்ணல்தங்கோ, மு. அ. சிவமணி அம்மை அவர்கள்

இயற்கையிற் கலந்த உயர்திரு. மந்திரமூர்த்திப் பிள்ளை அவர்களைக் குறித்து எழுதிய

## பிரிவாற்ருமைச் செய்தி.

அன்பிற்சிறந்த உயர்திரு. உரைவல்லார் வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களுக்கு, அன்பறிவுடையீர்!

வணக்கம். தங்கள் உடன்பிறந்தாரும், தமிழ் மக்கள் உயிரிற் கலந்தாரும், அண்மையில் என்போல்வாரையும், தமிழ் மக்களையும், தங்களையும் விட்டுப் பிரிந்து இயற்கையிற் கலந்தாருமாய, உயர்திருவாளர் - அறநெறிச் செம்மல் - (மந்திரமூர்த்திப் பிள்ளை) என்னும் அன்புருவண்ணல் பிரிந்த

பெருந்துயர் தங்களை வருத்தலாம்; வாட்டலாம்; ஏனெனில், அவர், தங்கள் உயிர்போன்றும், இரு கண்கள் போன்றும் - ஆறுதலாய் - அடைக்கலத்திற் கிடமாய் இருந்தார். ஆதலின்; ஆனால், அத் துயர் தங்களுடையது; தங்கள் இல்லத்தைச் சார்ந்தது, என்று தாங்கள் கருதுங்கால். என்போல்வாரிடத்தும், துணை வேண்டிய - ஆறுதல் நாடிய - நோய்த்துன்பம் போக்கிக்கொள்ள வந்தடைந்த மக்களிடத்தும் அன்புடைத் தங்களண்ணல் - எம்மண்ணல் நோக்கிய நோக்கும், பேசிய இனிய மொழியும், புரிந்த அன்பும், காட்டிய அருளும் எம்முள்ளத்தையும் உடலையும் உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் வருத்தல் - வாட்டல் மட்டும் செய்வதில்லை; உடலும், உயிரும், உலகும் மறத்தலே காண்கின்றோம். ஆகவே, தாங்கள் தங்கள் உடன் பிறந்தார் பிரிந்தமைக்கு எம்போல்வார்க்கு ஆறுதல் கூறி - அறிவுரை பகர்ந்து நலம்புரிய வேண்டுகின்றோம்.

இனிய தமிழ்த் தொண்டும், மருத்துவத் தொண்டும் நல்ல அறத் தொண்டும் புரிந்து நம்மைப் பிரிந்த அண்ணலை நினைந்து வருந்தும் எமக்குத், தண்டமிழ் பயின்று - தமிழ்ச்சுவை யூட்டி - தமிழைப் பரப்பி வழிகாட்டி நிற்கும் தங்களுடைய ஆறுதல்மொழி ஆறுதலளிக்கும் எனக் கருதுகின்றோம்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழர் அறம்! வாழ்க வெல்கதங்கள் அண்ணல் எண்ணம்!

---

## வேலூர் - கா. பே. சிற்றரசு (சின்னராசு)

உயிர்கலந்த திருவாளர் மந்திரமூர்த்திப் பிள்ளையவர்கள் உள்ளும் புறமும் ஒன்றி உவகைபூத்த முகமும், உள்ளம் நிறைந்த கனிவும் கொண்டு பொருள் உள்ளார்க்கும், இல்லார்க்கும் மருத்துவஞ் செய்தமைக்கு ஒப்பு, யாம் இதுவரை கண்டதோ இனிக் காணப் போவதோ இல்லை.

அஃதோடன்றி, உலகாண்ட மேன்மைத் தமிழே, தனதுயிரென எஞ்ஞான்றும் குன்றா இளமையோ டியங்குதல் வேண்டுமென்ற உறுதியும், ஊக்கமும் கொண்ட உயர்வுடையார். மாற்றாரெனினும் புண்படப் பேசும் பண்புடையரல்லர். சிறு நுழையிலிருந்து பெருங்காட்டை யாண்ட சீயம் போல், சிற்றூரிலிருந்து மற்றையூரின் மாண்புகேட்டு செந்தமிழுக்கரண்செய்த சீலர். அன்னார் பிரிவுக்காற்றாது வருந்தும் அவரது குடும்பமே யல்லாது, தமிழுலகும் வருந்தும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

வாழ்க தமிழ். சூழ்க தமிழரசு.

---

சித்தூர் எர்ரெபல்லே

## ஆநந்தாசிரமம் திரு. கு. சாந்தாநந்த சுவாமிகள்.

### ஆசிரியப்பா.

திருமலி யுலகிற் செறிதருந் தொண்டை
நாட்டிற் சிறந்த நலம்பெறு வல்ல
நகரின் வாழ்க்கை நடாவிய நல்லோன்
அச்சுதாநந்த னடியிணைக் கன்பன்
அடியார் தமக்கிங் காருற வாவோன்
வைத்திய லிங்கன் வான்பெருந் துணைவன்
மருத்துவத் தொழிலின் வல்லவனுகி
உடலின் பிணியு முயிர்க்குறு பிணியுந்
தகுமுறை யொழிக்குந் தண்ணளி யுடையான்
செந்தமிழ் மொழியிற் சீரிய பற்றுேன்
இல்லத் திருந்து மெவ்வகைப் பற்றும்
தொடரா திருந்த தூய வுளத்தோன்
மந்திர மூர்த்தியென் மாண்புடைப் பெரியோன்
பிரமா தியினிற் பிறந்திடு மாசி
திங்களின் முதலாந் தினஞ்சேய் நாளில்
உற்று ரெவரு முருகியுள் ளேங்கப்
பூத வுடம்பைப் போக்கியே போக்கில்
பூரண வானிலே பொருந்தின னன்னேன்
தன்புக ழென்றுந் தழைத்து வாழியவே.

---

அகரம் பெரிய சேரி சித்தவைத்தியர்

## திரு. முனிசாமி சுவாமிகள்.

தெள்ளிய புனல்வளம் படைத்த நாகநதியின் வடகரையில் எல்லா நலங்களும் செவ்வே அமையப்பெற்று விளங்கும் வல்ல நகரின் கண்வாழ்ந்து வந்த சித்தவைத்திய சரபம் உயர்திருவாளர் **யந்திரமூர்த்திப் பிள்ளை** யவர்களுடன் சுமார் 10 வருடகாலமாய்ப் பழகிவரும் பாக்கியம் பெற்றுடையேன். பிள்ளையவர்கள் தமது அருமைத் தந்தையாரிடத்திலேயே மருத்துவ நூல்களை நன்கு பயின்றும் உடனிருந்து பலகாலம் பழகியும் அனுபவ முதிர்ச்சி வாய்ந்த அரும்பெரும வைத்தியராவார். இவர் பெயரைக் கூறினும் இவரை நேரிற் காணினும் வார்த்தை யாடினுமே நோயொழியுமெனப் பல்லோர் ஆழ்ந்த நம்பிக்கையுடன் கூறவும் கேட்டுள்ளேன். எத்தகைய வலிய நோய்களையும் மிக்க எளிதில் நிவர்த்தி செய்துவிடுவார். எண்ணிறந்த ஏழைமக்களிடத்துப்

பிரதிபலன் கருதாமலேயே நோய் நீக்கியுள்ளார். அன்றி திரு அச்சுதாநந்த சுவாமிகளின் மாணவருமாவார். அகத்துறவுடையவர் ஆசியருக்கு ஆலயம் புனைந்தும் அடியார்களுக்கென மடாலயங் கண்டும் அரிய தொண்டாற்றி வந்தவர். எனது தமிழாசிரியராகிய திரு. **வைத்தியலிங்கம் பிள்ளை** யவர்களுக்கு உடன் பிறந்த முன்னவர். அவரது ஆருயிர் போன்று பிரியா வாழ்க்கை நடத்திய பெருமித முடையவர். இத்தகைய பெரியார் சர்வவியாபக ஆன்ம நிலையில் விளங்கப்பெற்றது கடமையே யாயினும் எமது புறநோக்கிற்குக் காணப்படாதுள்ளமையின் அதுபற்றி வருந்தாதிருக்க முடியவில்லை. தமயனைப் பிரிந்த தம்பியாரவர்கட்கும் அவரது மனைமக்களாதியர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை உரிமையோடும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

---

சித்த வைத்திய சாபம்

உயர்திரு, மந்திரமூர்த்தி பிள்ளை யவர்களின் முதற்றம்பி

**வைத்தியலிங்கம்.**

சீருடையவல் லையைவிளக்கஞ் செய்விளக்கே பனயனருட் செல்வ மேநற்
பேருடைய பெருந்தகையே மந்திரமூர்த் திப்பெயர்கொள் பெரியோய் நீதான்
ஈருடலுக் கோருயிரா யின்றளவு மிருந்தனையே யெளியனேற்கின்று
ஒருரையு நவிற்றும லொளித்ததுநின் னருட்கழகோ வுரைத்திடாயே.

ஆய்வதனின் மிக்கவனே யாரறிவி னிலக்களனே யகலா வன்புந்
தூய்மையுநன் குடையவனே தொலையாத பொறுமையனே சுவைத்துவக்கும்
வாய்மைநலம் பூத்தவனே மந்திரமூர்த் திப்பெயரெம் மானேயின்று
சேய்மையனு யினையெளியேன் செய்துளதாங் குறையெதுவோ தெரித்திடாயே.

மற்றிவன்போன் முன்னவனைப் பெற்றிலமே யென்றென்று மறுகு மாறீங்
குற்றவனே யென்னுயிருக் குயிராய வுத்தமனே யுவப்பி னென்னைப்
பெற்றவனிற் பெரியவனே பிரிந்தறியாப் பெற்றியனே பிரிவுற் றுயே
எற்றையினி யான்காண்பேன் எழிலுறுமந் திரமூர்த்தி யேந்தா லேந்தால்.

சுற்றெனைக்கா ணுயாயி னுளந்தரியாய் விளித்தருள்வாய் தனித்தற் கேது
உற்றிடினெவ் வொருபோழ்தும் யாக்கைநிலை கேட்டன்றி யுறங்கு கில்லாய்
இற்றையெனைக் காணுகிலாய் நீங்கியுளாய் நிலையோரா யிருப்புங் காட்டாய்
மற்றெருமந் திரமூர்த்தி யாயினைகொல் யான்காண வந்திடாயே.

தேற்றுவித்தாய் கோவடிவேற் றேசிகன்பாற் றமிழ்க்கலைகள் தேற்று வித்துப்
போற்றுவித்தா யென்னைபுமோர் பொருளெனமற் றவர்மதிக்கப் புந்தியானன்
காற்றுவித்தாய் பிரிவறுநல் வாழ்க்கையினு மமருவித்தா யந்தோ வின்று
மாற்றுவித்துப் பிரிந்தனைமந் திரமூர்த்தி யெந்தனுவிம் மாற்றந் தானே.

சொற்றபடி வெளிச்சென்று மீண்டுவரத் தாமதிக்கிற துடித்தே யேக்கம்
முற்றிடுவாய் வருநெறியின் முன்னுறுவாய் பன்முறையு மொழியா நிற்பாய்
உற்றவிடந் தனக்காளு முய்த்திடுவாய் வந்தவிடத் துவகை கூர்வாய்
மற்றிதனை யெண்ணியெண்ணி மனமிடிய வைத்தனையே மாண்பி தாமே.

வெருமுகத்தின் மேவுமவர் மிக்குளத்திற் களிதூங்கி வியப்பக் காட்டுந்
திருமுகத்தைக் காட்டாயோ திரும்பியினி வாராயோ செய்யவோர்சொல்
வருமுகத்து மலர்வாயால் வழுத்தாயோ வுடனிருந்து மகிழ்கிலாயோ
ஒருமுகத்து முவமையிலா வுத்தமமந் திரமூர்த்தி யுடன்வந்தோயே.

உழைத்துழைத்து முன்னோற்றுன் னுடன்பிறக்கப் பெற்றேனுள் ளுவகை
[யுற்றேன்
தழைத்தவருட் கிலக்கானேன் சஞ்சலமற் றித்துணைநாள் தகவாழ்ந் திட்டேன்
இழைத்துளவெவ் வினையான்மந் திரமூர்த்தி யுனையிழந்திங் கேங்கு கின்றேன்
பிழைத்தனையென் றழைத்தொருவர் பேசவினிக் கேளேனே பேதை யேனே.

விழித்தெழுந்திங் கிருவேமும் வெளிப்படுவேம் காகநதி மேவி மீண்டு
தழைத்தவரு ளச்சுதன்றன் சந்நதியினிரு மருட்குந் தங்கு கிற்பேம்
கழித்துமனைக் காரியத்திற் கன்னல்சில பின்னருளங் கலந்து சாவிச்
செழித்திடுவே மிவ்வழக்கிற் றிறம்பினையின் றென்னைகொலோ தெரிகிலேனே.

எத்தகைநோ யெத்தனையா னெய்துகினு முட்சலியா தெண்ணி யுன்றன்
உத்தியினா லுணவொன்றா லொழித்தருள்வா யஞ்சலையென் றோது கிற்பாய்
ஒத்துடனு முறைதருவா யுயரியமந் திரமூர்த்தி யொருவா வின்று
அத்தகைய செயலாற்றற் காரையிவண் வைத்தகன்றா யறைதி யந்தோ.

ஊணுமுறக் கமுமின்றி யுடன்மெலிவு நடைத்தளர்வு முள்ளச் சோர்வும்
காணுறவை கியநின்னைக் கண்டுவிழிப் புனல்கான்று கரைவேன் றன்னைப்
பூணுறுமன் போடுவிளித் தாறுதல்சொற் றுடற்காப்பும் புகன்றா யென்னின்
மாணுறுமந் திரமூர்த்தி மற்றையுன தருட்கெல்லை மதித்தற் காமே.

மக்களெழின் மனைச்சுற்றம் வான்பொருளா தியவனைத்து மதிக்குங் காலை
ஒக்குமுளத் தெம்பியினு மிக்கனவன் றெனத்துணியுன் னுளத்தின் பான்மை
சிக்கெனத் தேர்ந்தேயுமுனைப் பிரிந்தினிதே யுண்டுடுத்துத் திரிகின் றேனை
அக்கோநீ யொருவியது மறமேமந் திரமூர்த்தி யண்ணா லண்ணால்.

யானுவக்கிற் றானுவக்கு மியல்புடையாய் நினைப்பிரிந்த வெளியே னின்று
ஆனுடைப்பா லினைநீத்த வரும்புனலும் பூவினைவிட் டகன்ற நாறும்
தானுடைச்சா றகல்கரும்புஞ் சாலியினிற் கழிபதருஞ் சாரு மச்சில்
ஊனுமிவ ணைத்தனனிற் குடப்பாடோ வாமெனினிங் கொருவலாமே.

ஈன்றவனை மிகநோற்றா னெனவுலக மேத்துறச்செய் யியலோ யந்த
ஆன்றவன்வாய் மருத்துவநூற் பயின்றுமனு பவமுதிர்ந்து மறிவு நீடிச்
சான்றவனுக் குறுமுனிமுன் முனிவரொலா மோருருவிற் சமைந்தா ரென்றற்
கேன்றனைமந் திரமூர்த்தி யென்றுணைவா நின்பெருமை யியம்பற் பாற்றே.

திருத்தமுற வாங்கிலத்துத் தேர்ந்தமருத் துவர்தாமுஞ் சித்தர் நூலின்
மருத்துவருங் கைவிடுமவ் வான்பிணியோர் தம்மையெலாம் வரவேற் றுய்விற்
பொருத்தமுறு மருந்தீந்து போந்துளநோய் தீர்த்துவகை பூக்கச் செய்யும்
கருத்தன்மந் திரமூர்த்தி கையறவுக் கிரங்காரைக் காண்கிலேனே.

ஒத்தனையே லத்துணையே யொழிந்ததுநோ யெனத்துணியு முலக நீயும்
சித்தமதிற் றேர்ந்துநோய் வருந்திறனை மருந்தீந்து தீர்த்து நிற்பாய்
வித்தவரு வாய்கருதாய் மேற்பெறுதற் சிறிதேனும் விருப்பிற் கொள்வாய்
இத்தகையுத் தமனுமந் திரமூர்த்தி யினைநிகர்வார் யாவரேயோ.

உள்ளவரில் லவர்பகைவ ருறவினர்மேல் கீழவரென் றுளங்கொளாது
விள்ளருநோ யொடுவருவார் தமையேற்றந் நோய்த்திறனு மேவு மாறும்
தெள்ளவுளந் தேர்ந்தெளிதிற் செயுமருந்தா லவைநீக்கும் செவ்விவாய்ந்த
ஒள்ளியமந் திரமூர்த்தி மீண்டுவரி னலதெவர்க்கு முறுதியுண்டோ.

நங்குலத்துப் பெரியரெலா நல்லாவா யதன்பாலா நவில்வெண் ணெய்யாய்
இங்கதனி னிருஞ்சுவையா யெய்தினர்நீ யதன்பயனு யினையென் றக்கால்
எங்களருந் தவப்பயனே யெழின்மிகுமந் திரமூர்த்தி யேந்தா னின்னைப்
புங்கமுறப் பயந்தோனும் போந்தடுத்துப் பிறந்தேனும் புனித ரானேம்.

யாக்கைமுத னீயலைமற் றிவற்றினுக்கு வேறாகி யாவும் காணும்
சாக்கியது நீயெனுமச் சற்குருவா மச்சுதற்குத் தளியொன் றாக்கி
மீக்குலவு மதையடுத்து வியன்மடமும் புனைவித்து விழாவி னேடு.
உளக்கமுட னித்தியபூ சனையுநடா வினையினிமேல் உஞற்று வாரார்.

வாக்குமனந் தனக்கரிய வான்பொருளிற் கலந்தீண்டு மன்னி நோக்கும்
நோக்கதனுக் கிலக்காகா நோன்மையின்மே வினையேனு நுவலினென்றன்
பாக்கியமே பாக்கியத்தின் பயனேமந் திரமூர்த்திப் பரமா வின்று
ஆக்கைமுதற் கரணத்தா லடிதாழ்ந்து வாழ்த்திநினைந் தகல்கிலேனே.

---

திருவாளர் வித்வான் - **வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள்** மாணவன்

காட்டுக்காநல்லூர் **மு. சுந்தரன்** இயற்றிய

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.**

திருத்தகுநல் வல்லநகர் செய்தவமாய் எய்தினைசீர் சிறக்க வேய்ந்தாய்
வருத்தமுற வந்தோர்தம் வளர்பிணிகள் நீக்கியருள் வழங்கும் வண்மை
மருத்துவனென் றிருந்தனைநீ ! மகிதலத்து நினைநிகர்வார் மற்றுார் கொல்லோ
அருத்திநிறை மொழிமந்த்ர மூர்த்தியெனும் அரும்புகழ்கொள் அண்ணல் !
அண்ணல் !

பல்வளஞ்சேர் வல்லநகர்ப் பனையவேள் தவப்பயனே ! பரிந்துபெற்ற
சொல்லருமந்திரமூர்த்தித் தூயவனே ! உனதுண்மை துணிந்து கூறின்
வல்லமெனும் சொற்பொருளை யிலவாக்கிப்பிரிந்தனைநின் மனக்கோள்யாதோ !
எல்லையிலாத் துயர்க்கடல் வீழ்ந்திரங்குகின்றேம் என்செய்வேம் ஏழையேமே.

உயிர்க்குறுதி தீருங்கல்வி யுதவினனெற் குன்பின்னர் உதித்த தோன்றல் !
பயிற்சியுடன் உடற்குறுதி பயப்பனவும் உலகியலும் பரிவின் என்றும்
செயிர்ப்பறயான் தெளிவகையில் தேற்றினைநீ! யாண்டின்று சென்றாய்? என்னு
உயிர்ப்புடன்நோ தரவொளித்தாய் மந்திரமூர்த்திப் பெரியோய் ! உரிமை
யாமோ?

தாயனைய தயையுடையாய் ! தவலறுநின் வயினடியேன் சாருந்தோறும்
நீயுகின திளவலெனு மெனதிறையும் பிரிவின்றி நிலவக் காண்பேன்
சேயனையேற் குளத்துன்ப மிகப்பிரிந்திஞ் ஞான்றெங்கு சென்றுளாயோ ?
தூயவனே ! உலகுபுகழ் தருமந்தர மூர்த்தியெனுந் தோன்றால் தோன்றாய் !

அச்சுதற்காலயம்புனைந்தும் ஆம்பணிகள் பலபுரிந்தும் ஆண்டுதோறும்
மெச்சுறுநற் புலவர்களால் உண்மையுரை செய்வித்த மேன்மையோனே !
இச்சகத்தில் உனைப்போலும் இனியொருவர் தமைக்காண்டற்கியலுமோ என்
பிச்சுமனம் ஆறுகிலேன் பேதுறுவேன் நிற்பிரிந்த பெற்றியானே!

**வெண்பா.**

மன்னு பிரமாதி மாசிமுதல் நாள் செவ்வாய்ப்
பன்னும் அசுவினியாம் பாரகத்தின் - மன்னியசீர்
வல்ல நகர்மந்த்ர மூர்த்தியிறை வான்வடிவில்
செல்லப் பெறுநற் றினம்.

---

வித்வான் திரு வைத்தியலிங்கம் பிள்ளை மாணவர்

காட்டுக்காநல்லூர் திரு, ரா. செங்கல்வராய ரேட்டியாரவர்களியற்றிய

**அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.**

திருமிகுந்த சான்றோரும் மருளகலும் துறவிகளும்
செறிவல் லப்பேர்
மருவுற்ற மாநகரின் தவமுற்ற வடிவெனவும்
வையத் தோர்தம்

தெருண்மிக்க புண்ணியத்திற் றிகழுற்ற பயனென்னவும்
செனித்துப் பன்னூல்
ஒருமிக்க கற்றுயரு மொருமந்த்ர மூர்த்தியெவண்
உற்றுளாயே

இம்மையில்நீ பெறற்குரிய இரும்பயனைப் பெற்றாயால் இம்பர் யாரும்
அம்மாவென் றதிசயிப்ப அச்சுதனும் குருபானுக் கணிசெய் கோயில்
செம்மையுறக் கண்டனையால் குருபூசை முதற்றொண்டு செய்திட்டாயால்
எம்மையினு நீபெறு சீர் எவர் பெறுவார் மந்திரமூர்த் தியென் போயே

மனையிரங்க மகனிரங்க மற்றையசுற் றமுமிரங்க மனத்தின் என்றும்
உனைநம்பி உயிர்வாழ்ந்த உம்பியரும் யாங்களுமிக் குன்னி யுன்னி
அனையிழந்த கன்றேபோல் அழுதலறப் புவியினைவிட் டகன்றாயையா
உனையிழந்த மாத்திரமோ உடல்நலத்தோ டறிவிழந்தோம் உண்மை யீதே

ஓங்குதமிழ் இலக்கியமும் இலக்கணமும் தருக்கமுதல் உயர்ந்த நூல்கள்
பாங்குபெறக் கற்றுணர்ந்து பிரசங்க பானுவெனப் பலரும் போற்ற
வீங்குபுகழ் கொண்டுன்னை யொருபோதும் பிரிந்துறைய விரும்பாத் தம்பி
எங்குறவைத் தியலிங்கன் என்பானைப் பிரிந்தனையே ஏற்ப தேயோ

அந்நாள்நுங் குலத்தொருவன் அரியவயித்தியனாகி அரசர் பாலும்
சன்னதுகள் பெற்றான் நீ அவன் பெயரே பூண்டுபல சன்மானங்கள்
இந்நாளில் பெற்றனையால் இனிமேலும் பலபெறுவார் இனியமைந்தர்
எந்நாளும் நின்வழியோர் ஏற்றமதற் கிடையூறொன் றில்லை யாலோ

## வெண்பா

பிரமாதி மாசி பிறந்தநாள் செவ்வாய்
வருமுதற்பக் கந்திதியோர் ஐந்தின் ஒரு முதல் நாள்
போதமிகு மாசான் புகழ்மந் திரமூர்த்தி
நாதனுரு வாகியநன் னாள்

---

திருவாளர் வித்வான் வைத்தியலிங்கம் பிள்ளை, அவர்கள் மாணவர்,

பா. மு. துரைசாமி ஆச்சாரி இயற்றிய

## ஆசிரியப்பா.

திருவளர் கமலத் துருவொளிர் வயல்சூழ்
வல்லமா நகரின் வாழ்க்கைய னாகித்
தனைநிகர் பனையவேள் தவப்பய னாய்வரு
மன்னிய மைந்தருண் முன்னுறு முதல்வ !

அருங்கலை யாய்விற் பெரும்பொழு தமரும்
திருந்திய வறிவிற் பொருந்திய புனித!
திருத்தகு மருத்துவத் திறத்திற் சிறந்து
நோய்வகை யாவும் நுண்ணிதிற் றேர்ந்து
வாய்முதல் நாடி வாய்ப்பச் செய்தே
பீழையுற் றயரும் ஏழைமுன் னுவோர்
உடனோய் மாற்றியும் உளநோய் வீழ்த்தியும்
இவனே கருணையன், "இவனே கற்பகம்
இவனே யெவர்க்கும் எழிற்றுணை யாவோன்"
என்றென் றெவரும் ஏத்தவெம் போல்வார்
கண்ணுண் மணியாய்க் காட்சிக் கெளியனாய்
இத்துணைக் காலம் இருந்துவப் பித்த
சுந்தரத் தோன்றலா மந்திர மூர்த்தி நீ!
எம்மனோர் தம்மை அம்மவோ பிரிந்தே
மருத்துவத் திறனை மருத்துவர்க் குரைப்ப
எண்ணியே போலும் விண்ணகம் புக்காய்
ஐயகோ வினியென் ஆற்றுதும் யாமே
மற்றொரு காலின் மலர்முகந் தன்னை
காணக் கிடைத்தே களிப்புறு வேமோ
இயலா தேனும் இவணொரு தோன்றாத்
துணையா யேனும் தோமற விருந்தே
நலந்தக வெமக்கு நல்குதி நின்னிசை
வாழிய! பெரிதே வாழிய! பெரிதே
ஆழிசூ ழுலகின் வாழிய! பெரிதே

---

வல்லம் திரு.வித்வான், வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் மாணவர்,

திரு. K. K. சுப்பிரமணியம் தலைமையாசிரியர்

எய்டெட் பாடசாலை காட்டுக்கா நல்லூர்.

**ஆசிரியப்பா.**

பல்வளஞ் செறிந்து பண்புடன் விளங்கும்
வல்லமா நகரின் வளம்பெற வாழ்ந்து
நற்குடிப் பிறந்த நல்லறி வாளன்
பல்கலை வல்லுநன் பனையப் பிள்ளை
நவையற நோற்ற நற்றவ மதனால்
நண்ணிய ஞாலம் நயக்கத் தோன்றிச்
சித்தர் நூல்களைச் சிறப்புற ஆய்ந்து
ஆங்கில நூன்முறை மருத்துவர் வியக்க

நோயின் திறனும் வாய்தரு மாறும்
காலநிலையும் கருதுடல் வன்மையும்
எண்ணிமருந்தீந் திரும்பிணி நீக்கும்
மன்பதைக் கன்ப மந்திர மூர்த்தி
எனும் பெயர் புனைந்த வேந்தற் புனித
தமிழகம் தனில்நீ தனிச்சிறப் பெய்த
ஈகைமெய்யன்பு இரக்கம் மேன்மை
ஆள்வினை யுடைமை அடக்கம் பொறுமை
எனும்நற் குணங்கள் யாவுநன் கமைந்து
வாழ்ந்து வந்தனை வள்ளால் வள்ளால்
தாயின் பரிவும் தகைசால் கல்வியும்
ஏற்றநன் மருந்து மெண்ணிநன் கீந்தும்
ஞாலமெச் சிடவே நலம்பெறக் காத்த
உன்னைவிட்டகலற் கொருப்படா இளவல்
எம்முடையான் எழில்வைத்யலிங்கத்
தோன்ற லோர்புறம் தொல்நிலம் வீழ்ந்து
ஓவென் றலற உன்னிலை யோர்ந்து
மனைவியு மக்களும் மற்றைச் சுற்றமும்
பற்றுக் கோடில் படர்கொடி போல
மற்றோர் புறத்தில் மனமிடிந் தேங்கத்
தளரா நெஞ்சுடன் தலைமை தாங்கித்
திறம்பெற வெதுவும் செயத்தகு தலைவ
எங்குற் றுயென எம்போல் இளைஞர்
கூட்டமு முள்ளங் குழைவுற் றேங்க
அழியும் யாக்கை யாமதை யொருவி
அன்புரு வான அச்சுதன் அடியை
அடைந்தனை யதனால் அந்நிலை அடியதனை
எண்ணி எத்துதும் இரங்குதும் இறையே
வாழிய நின்பெயர் வாழிய நின்புகழ்
வாழிய தமிழகம் வளம்பல பெற்றே.

---

புதூர் அறவள்ளல் திரு அண்ணாமலை முதலியாரவர்கள் பாடசாலை

ஆசிரியர் திரு. ஜயராம முதலியாரவர்கள்.

வளத்தின் மிக்க வல்லநகரின்கண் வாழ்க்கையுற்று, செந்தமிழ்க்கலைக் கடலிற்றோன்றிய மணி யொளிஞாயிறன்ன புலமை மிக்க எமது தமிழாசிரியர் உயர்திரு வைத்தியலிங்கம் பிள்ளையவர்களின் உடன்பிறந்த உத்தமரும், அவரது உடல் பொருளாவியாக விருந்தவரும், ஏழை பங்காளருமாகிய உயர் திரு மந்திரமூர்த்தி பிள்ளையவர்கள் தமிழின்கண்ணுள்ள மருத்துவ நூல்களை

யெல்லாம் செவ்வனே ஆய்ந்து தேர்ந்த வல்லுநராய்த் திகழ்ந்தார்களென்பதில் ஐயமில்லை யென்பதையான் சொல்வதினும் அறிவுலகம் நன்கு தேர்ந்துள்ள தென்பது வெள்ளிடை மலையாம். இப்பெரியார் உள்ளவர் இல்லவர், இன்னார் இனியார் என்னும் பாகுபாடின்றி யாவரிடத்தும் சமநோக்குடையவர். தாய்மொழியாய தமிழின்கண் அளவிலாபற்றுடையவர். அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபடுபவர். கற்றோரைச்சேர்ந்தொழுகும் கருத்துடையவர். உற்ற விடத்தில் உயிரையும் வழங்குந்தன்மையவர். எத்தகைய இடுக்கண் வரினும் கலங்கா மனவன்மை பெற்றவர். எண்ணிய எண்ணியாங்கெய்துந் திண்ணியர். உடுக்கை யிழந்தவன் கைபோல் நட்புடையாரின் இடுக்கண்களையும் எந்தல். மலர்ந்த முகமும், குளிர்ந்த நோக்கும், இனிய சொல்லுமுடையவர். செல் விருந்தோம்பி வருவிருந்து நோக்கி நிற்கும் மாண்பினர். அன்பினளவைக் குறிக்குமிடத்து இன்பிற் பயந்ததாயினும் தலை சிறந்தவர். எதையும் ஆய்ந்து துணியும் அறிஞருமாவார். நோயொக்குமென்னின் மருந்தொக்குமென்னும் ஆன்றோர் கூற்றுக்கிலக்கியமாயுள்ளவர். தமது அரும்பெருந்தந்தையாராகிய உயர்திரு **பனையப் பிள்ளையவர்களிடம்** இளமை தொட்டே மருத்துவ நூல்களை யெல்லாம் வரலாறு முறையில் ஐயந்திரிபறக்கற்றுத் தேர்ந்தவர். மேனாட்டு முறையிற் கற்ற பட்டதாரி மருத்துவர்களும் கைசோர்ந்து விட்டுவிட்ட பெரும் பிணியாளர்களை யெல்லாம் அன்னார் பெருவியப்பெய்துமாறு நோய் நீக்கித் தமது தமிழ் மருத்துவத் திறத்தைக் காட்டியருளியவர். அன்றி அப் பட்டதாரிகளுக்குற்ற நோய்களுக்கும் மருந்தளித்துக்காக்கும் மருத்துவர் பெருமானாய் விளங்கி வந்தவர். தமிழ்நாட்டிலுள்ள மருத்துவ நூல் வல்லாரில் தாமும் ஒருவராய் தலை சிறந்திலங்கியவர். எளியார்க்கேற்றவாறு பொருட் செலவின்றியே கியாழத்தாலும், சிகிச்சையாலும் நோய்தீர்க்கும் வல்லுநர். காலம், இடம், நோய்த்திறம், நோய்மூலம், நோயாளியின் உடல் வன்மை வெப்பதட்பத்தன்மை முதலியவற்றை நன்கு ஆராயும் பெருமதி படைத்தவர். தமது சொற்செலவாற் பிறர் பயன் பெறக்கூடுமாயின் எக்காரணத்தும் பின்னிடாதவர். அருள் பழுத்த பெரியார் அச்சுதானந்த அடிகளிடத்தும் ஈடுமெடுப்புமில்லா ஈரோட்டுப் பெரியாரிடத்தும் நிரம்பிய அன்புடையவர். எம்போன்ற மாணவர்களுக்கு அறிவு புகட்டுவதில் அரிய தந்தை போன்றவர். இத்தகைய பெரியார் இயற்கையெய்தி யமைக்கு உலகம் வருந்தாதிருக்க முடியாது. அன்னாரின் இன்னுயிர் போன்ற எமது ஆசிரியர் அவர்கட்கும் பெரியாரின் குடும்பத்தாருக்கும் எமது மனமார்ந்த அனுதாபம் உரிமையுடன் செலுத்துவதோடு உயர்திரு **மந்திரமூர்த்தி பிள்ளையவர்கள்** பெரும்புகழ் என்றும் நிலைபெறுமாறு எல்லாம்வல்ல இறைவனை முக்கரணத்தும் வழிபடுவேம் ஆயினம்.

தூய தமிழ்க் காவலர்
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம்

வல்லம் திரு. வித்வான், வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் மாணவர்

மன்னுயக்கன் பாளையம்

## திரு. ந. க. அரங்கசாமி முதலியார் அவர்கள்

### அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

1 உலகு புகழ் வல்லநக ரொளிவிளக்கே பெருந்திருவே யுலவா தென்றும்
நிலவு புக ழச்சுதன்றன் மாணவனே வயித்தியத்தில் நிபுணத்தன்மை
குலவியமாண் புடையானே கோக்கருணை வடிவினனே குறையிலானே
இலகியமந் திரமூர்த்தி யெனும் பெயர்கொள் பெரியானே யாண்டுற்றாயே

2 அடுத்தவரை யாதரித்து மருநோய்க்கு மருந்தளித்து மகலாதென்றும்
கடுத்தபசிக் குணவீந்துங் கண்ணியமாய் வாழ்ந்து வந்த கருணையானே
தொடுத்தபுக ழச்சுதனுக் காலயமு மறவோர்கள் சூழ்ந்து நாளும்
மடுத்திருப்ப மடந்தானும் வனைவித்த பெருந்தகையே மறைந்ததென்னே

3 பெற்றவரைக் காட்டினுமே பெருநெறியெற் கறிவித்த யெரியோ யென்னை
உற்ற கொடு நோயொழிய வுரியமருந் தினையுதவி யுய்வித்தாயே
கற்றிலனுன் மற்றிதற்கோர் கைம்மாறுன் னுதவியினைக் கருதிநாளும்
சொற்றவுனை மறவாது துதிப்பதுவே முறைமையெனச் சொல்லுவேனே

1 மனையாரு மனங்கலங்கி மாழ்கியொரு பால்கதற மைந்தரோடு
இனமான சோதாருங் கேளிருநின் னன்பர்களு மிரங்கியேங்கத்
தினைபோது நினையகலா வைத்தியலிங் கனுமுள்ளந் திகைத்து மாழ்க
வினையேயோ வறுபானுன் காண்டகவை யினினுலகை விட்டுளாயே

5 மண்ணுலக வாழ்க்கையிது மாயமெனக் கொண்டமுத மருவியுண்ண
விண்ணுலக மேவினையோ வியந்துனையே பெருந்துணையா மேவியோமைக்
கண்ணின்றிப் பிரிந்தனையே காண்பதினி யெக்காலம் கருத்தில் யாங்கள்
எண்ணியவெண் ணங்களெலாம்பகற்கனவா யொழிந்ததுமற் றென் செய்வோமே.

---

வல்லம் திரு. வித்வான், வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் மாணவர்,

இராஜாபாளையம் திரு. இராமகிருஷ்ண கவுண்டர் அவர்கள்.

வல்லம் சித்த வைத்திய சிகாமணியாகிய உயர் திருவாளர் மந்திர மூர்த்திப்பிள்ளை அவர்கள் தமிழகத்திலுள்ள மருத்துவமணிகளுள் தலைசிறந்த ஒருவராவர். அகத்தியராதி முனிபுங்கவர்க ளருளிச் செய்த மருத்துவ நூல் களைத் தமது அருமைத் தந்தையாரிடம் வரலாற்று முறையிற் பயிற்சி செய்து

அவற்றின் அருமை பெருமைகளை யெல்லாம் துருவித்துருவி கொள்ளை கொண்டவர். அனுபவ முதிர்ச்சியுடையவர். நாடி நிலை நன்குணர்ந்தவர். மக்களிடத்துச்சம நோக்குடையவர் இன்னாரினியா ரெனக்கருதாது தம்மிடத்துவரும் நோயாளிகளை மலர்ந்த முகத்துடன் வரவேற்று மிக்க எளிய வகையிலேயே நோய்களைத் தீர்த்து விடுவார். நோய் தீர்த்தலில் பெறும் பொருள் மிகச்சிறிதளவாயினும் பெரிதாகக்கருதி மகிழ் வெய்துவார். தாய் மொழியாய தமிழினிடத்து மிகப்பற்றுடையவர். திரு அச்சுதானந்த சுவாமிகளினிடத்துத் தொண்டு பூண்டொழுகி ஞானச் செல்வராய் விளங்கியவர். எத்தகையோருள்ளத்தையும் கவரத்தக்க சொற் செல்வமுடையவர். ஏழைகளுக்கு இலவசமாகவே நோய்தீர்ப்பவர். கூரிய அறிவாற்றல் அமைந்தவர். மருத்துவமணியாய் நீண்ட காலம் ஜீவித்திருந்த உயர் திரு. பனையப் பிள்ளையவர்களின் முதன் மகனுயுள்ளவர். பிறர் நலம் பேணும் பெருந்தகையாளர். எனது தமிழாசிரியர் வித்வான் திரு. வைத்தியலிங்கம் பிள்ளை யவர்களுக்கு ஆருயிர் ஒத்த தமையனுராவார். மற்றும் இவரது அருங்குணங்களை எழுதப்புகுவதெனின் அவை எட்டிலடங்காதனவாகும். இத்தகைய பெரியார் தமது 64-வது வயதில் தமது தூல உடலை நீத்துச்சிவாகாரமாய் விளங்கப் பெற்றனர். ஈண்டுக்கூறியயாவும் புனைந்துரையன்று யான் கல்விபயின்ற காலத்து உடனிருந்துகண்ட உண்மை நிகழ்ச்சிகளேயாகும். இவரது பிரிவு இவர் குடும்பத்திற்கேயன்றி உள்ளூர் வாசிகளுக்கும், அடுத்துள்ள பல வெளியூர் வாசிகளுக்கும் ஈடுசெய்ய முடியாத பெரிய நட்டமேயாகும். இனித்தமிழ் நாட்டிற்கும் தமிழரியக்கத்திற்குமே பெரு நஷ்டமெனக்கூறினு மிகையாகாது. அவரது பெரும் புகழ் என்றும் யாண்டும் நிலை பெறுவதாக.

---

திருவாளர் வித்வான்-வைத்தியலிங்கம் பிள்ளை, அவர்கள் மாணவன்.

**க. நீ. பிரபாகரன் இயற்றிய**

## ஆசிரியப்பா.

நீர்மலி நாகை நீணதி வடபால்
வல்லமா நகரில் வாழ்க்கையுற் றெவரும்
நவின்றிடு சித்த நல்வைத் தியத்தும்
பாவினும் வல்ல பனையப் பிள்ளைசெய்
தேவிபூ சனையால் சேயென வந்தோய்
உயிர்க்கா லயமாம் உடலை வருத்தும்
பிணியினை நீக்கும் பேரறி வாள !
அறிவை வளர்த்தற் காகிய கல்வியைப்
போதித் திடற்குப் புனிதத் தம்பியை
நல்கிமற் றெம்மை நலம்பெறச் செய்தோய்
தன்னிலை யதனைத் தகத்தோர் தரவே
அச்சுதன் றன்னை அடைந்தறி வுற்றோய்

அற்புத நின்னியல் அகிலருங் காணச்
சுப்பிர மணியனுந் தோன்றலை யளித்தோய்!
வந்தவ ருவப்ப வாய்மொழி நவிற்றும்
மந்திர மூர்த்தியாம் மாண்புடை யோய்நீ
மறந்தெமை யெல்லாம் மாறுத லில்லா
அன்புரு வாஞ்சிவ மதனிற் கலந்தே
எங்குமே நிறைவா யாயினும் யாங்கள்
தாயினைப் பிரிந்த சேயினைப் போல
எங்குறப் பிரிவுற் றேகின நன்றோ—!
ஆயினும் நின்புகழ் அவனிமீ தென்றும்
வாழிய! பெரிதே வாழிய! பெரிதே.

---

தமிழ்த் தாய் வாழ்க.

வல்லம் சித்த வைத்திய சரபம்

உயர்திரு. **மந்திரமூர்த்திப் பிள்ளையவர்கள்,**

விதேக கைவல்யமெய்தியது குறித்து,

ஒண்ணுபுரம்,

ஸ்ரீ குமரன் திருச்சபையினர் பாடிய

**கையறு நிலைச் செய்யுட்கள்.**

பூக்கண்ணி யிசைமுரலும் புள்ளினத்தின் திரளிருண்டு
மீக்கண்ணு முகிலினத்தை மேவக்கண் டாலமயில்
மாக்கண்ண மங்கலங்காண் மருவுபதி யெனக்கிள்ளை
தேக்கண்ணீர் மலர்சொரியத் தேன்குதிக்கும் நான்குதிக்கும்.

"பணிசெய்வ தென்கடன்கேள் பரம்பொருளே" எனப்பரவி
யணிசெய்தமி ழமுதமொழி யரசுநெறி விரசினர்போல்
பணிசெய்மர பதன்முதல்வர் பனையப்பன் குலம்பரசு
மணிசெய்நல மிகுதிருமந் திரமூர்த்தி வரமூர்த்தி.

சித்த மருத் துவமென்னும் செந்துறையிற் றுறைபோகி
இத்தரையிற் பிணிப்பகையாய் இருந்தனைமந் திரமூர்த்தி
பிணிப்பகையாய் இருந்தனைநீ பிறங்குநலமருந் தினைநீ
அணிப்பகையாய் மந்திரங்க ளமருலக மமர்ந்தனையால்.

பொய்யுடலென் பார்கூற்றுப் போய்யென்பாய் போல்மருந்தால்
மெய்யுடலென் றுரைநிகழ மேவுமுயிர் மருத்துவன்நீ.
மேவுமுயிர் மருத்துவன்நீ வியன்தமிழ்நூ லருத்துவன்நீ
தேவுநெறித் துறவிகளைத் துறவாமே சிறந்தனைநீ

உடல்வகைகட் கேற்பவரு முறுபிணியும் அதன்றிறமும்
கெடல்வகைகண் டாவனவே கெழுமவுரை தருபவன்நீ
ஆவனவே கெழுமவுரை தருபவனே வானவரின்
ருவனவே யுரையெனநின் றடிபரவ வமர்ந்தனையால்

### வெண்பா.

இன்ன நலத்தால் இயல் ஏந்தால்! நின்பிரிவால்
துன்னு துயர்தீரத் தோன்றவருள் —மன்னிய
தூமக்கள் உடன்பிறந்தார் மாமனையார் நற்றுணைவர்
பிக்கநலம் யாவும் மிகுந்து.

நலம்! நலம்!!

